பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விழுயல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 11 செவ்வாய்க்கிழமை 25.06.2024 கதிர் 230

## சு.கவிற்கு நானே தலைவன் இனமேல் புதிய இலட்சினை

### அமைச்சர் விஜயதாச ராஜபக்ச அறிவிப்பு

சிறீ லங்கா சுதந்திர கட்சியின்யாப்புக்கமைய நானே கட்சியின் தலைவர். நீதிமன்றதடை உத்தரவு காரணமாக தற்போதைக்கு அந்த பதவியில் செயற்படுவதில்லை. அத்துடன் எதிர்வரும் தேர்தலில் சுதந்திரகட்சிபுதியஇலட்சினையில் போட்டியிடும் என நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ச தெரிவித்தார்.

கண்டியில் இடம் பெற்ற லங்கா சுதந்திர கட்சி தொகுதி அமைப்பாளர்களின் கூட்டத்தின்பின்னர்செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர்அங்கு தெரிவித்ததாவது:

சுதந்திர கட்சியின் யாப்பின் பிரகாரம் நானே கட்சியின் தலைவர். என்றாலும் நான் தலைவராக செயற்பட நீதிமன்ற இடைக்கால தடை உத்தரவு ஒன்று இருப்பதால் தற்போதைக்கு தலைவர் பதவியில் செயற்படுவதில்லை. மிக விரைவில் ☞ 8

## தமிழ் பொது வேட்பாளரை நிறுத்த ஜனநாயகக் கூட்டணி தீர்க்க முடிவு

### ஜூன் 29 தமிழ் மக்கள் பொதுச் சபையோடு பேசவும் தீர்மானம்

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதென ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது. இதுதொடர்பாகஜூன் 29 சிவில் அமைப்புக்களின் கூட்டான 'தமிழ் மக்கள் பொதுச்சபை'யை சந்திப்பது எனவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் நிறைவேற்றுக்குழுக் கூட்டம்வவுனியா கோவிற்புளியங்குளத்தில் உள்ள தனியார் விடுதியில் நேற்று பிற்பகல் 2.30இற்கு ஆரம்பமாகி மாலை 6 மணி வரையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன்தலைமையிலானபிரதிநிதிகளும்,புளொட் சார்பில் பவன் தலைமையிலான பிரதிநிதிகளும், ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் சுரேஷ்பிரேமச்சந்திரன்தலைமையிலான பிரதிநிதிகளும் தமிழ்த் தேசியக்கட்சியின் தலைவர் சிறிகாந்தா தலைமையிலான பிரதிநிதிகளும், ஜனநாயகப் போராளிகள் கட்சியில் வேந்தன் தலைமையிலான பிரதிநிதிகளும்பங்கேற்றிருந்தனர்.

இந்தக் கலந்துரையாடலில் ஏற்கனவே ஜனநாயக தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை ஜனாதிபதி தேர்தலில் நிறுத்துவதென கொள்கை அளவில் எடுக்கப்பட்டிருந்த ☞ 9

## இனி இது ரகசியம் அல்ல!

பொருளாதார நெருக்கடியில் இருந்த நாட்டைத் துணிந்து பொறுப்பெடுத்து அதிலிருந்து இலங்கையை மீட்ட ஒரே துணிச்சல்மிகு கதாநாயகன் நானே என்று மாவட்டம் மாவட்டமாக பெருமை பீற்றி வரும் நிலையில், உண்மைநிலவரமேவேறுமாதிரியாக இருக்கின்றது.

அண்மையில் வடக்குக்கு வந்திருந்த ரணில் விக்கிரமசிங்க, யாழ். பல்கலைக்கழகத்திற்காக யாழ். போதனா வைத்தியசலையில் நிறுவப்பட்ட கட்டடத்தையும் கிளிநொச்சி வைத்தியசாலைகளில் நிறுவப்பட்ட கட்டடத்தையும் திறந்த வைத்தார். யாரோ பெற்றபிள்ளைக்கு தான் உரிமை கோருவதுபோன்று, வடக்கு மாகாண முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சர் சத்தியலிங்கத்தின் எண்ணக்கரு, திட்டமிடலில் உருவாகி, நிதி அனுசரணையாளர்களும் தேடிப் பிடிக்கப்பட்ட இந்தத் திட்டங்கள் எல்லாவற்றையும்தானேநெதர்லாந்து அரசுடன் பேசிச் செய்வித்தார் என்று கதைவிட்டிருந்தார்.

அவர் சொல்வதைப் போன்று அந்த வைத்தியசாலைக் கட்டடங்கள் எல்லாம் அவரது முயற்சியாலேயே கிடைத்தன என்று வைத்துக் கொண்டாலும் கூட, ☞ 2

# நீதி அமைச்சரினது கருத்துக்கள் நீதிமன்ற சுயாதீனத்திற்கு சவால்

### நீதிச் சேவைகள் சங்கம் தெரிவிப்பு

ஜூன் 19 நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தின் போது, நீதியமைச்சர்நீதிமன்றக்கட்டமைப்பு தொடர்பில் விமர்சித்து முன்வைத்த பொறுப்பற்ற கருத்துக்கள் நீதிமன்ற சுயாதீனத்தன்மைக்குச் சவால் விடுப்பதாக, இலங்கை மாவட்ட நீதிபதிகள் மற்றும் நீதிவான்களை உள்ளடக்கிய இலங்கை நீதிச்சேவைகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அரசியல் ரீதியிலான தமது இருப்பை சவாலுக்கு உட்படுத்தும் வழக்குகளின் போது ☞ 2

## பதவி விலகிவிடவும் தயார் அமைச்சர் ஹரின் சூளுரை

2024 இருபதுக்கு 20 உலகக் கிண்ண கிரிக்கட் போட்டிக்காக சென்ற இலங்கை கிரிக்கெட் அணி, ஒழுங்கீனமாக நடந்துகொண்டதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டு நிரூபிக்கப் பட்டால் அமைச்சர் பதவியை இராஜினாமா செய்வதாக சுற்றுலாத் துறை, காணி, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடகமையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுதந்திர இலங்கையின் 75 வருட வரலாற்றில், மக்களுக்கு முழு உரிமையுள்ள காணி உரிமையை வழங்குவதற்கு ஜனாதிபதி ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட முதல் நடவடிக்கையாக 'உறுமய' காணி உறுதிப்பத்திரம் ☞ 2

## நாடு வங்குரோத்திலிருந்து மீண்டுவிட்டதாக சர்வதேச அமைப்புகளே அறிவிக்கவேண்டும்

### அதை ரணில் சொல்லக்கூடாது என்கிறார் மரிக்கார் எம்.பி

நாடு வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டுவிட்டது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சொல்லக் கூடாது, அதனை கடன் மதிப்பீட்டு சர்வதேச நிறுவனங்களே செய்ய வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களுடன் பேசிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாளைபுதன்கிழமை நாட்டு மக்களுக்கு விசேட அறிவிப்பு கிடைக்கவுள்ளதாக ☞ 2

## புரட்சிகரமான சாவாலை ஏற்றவர் விக்கிரமசிங்கவாம்

நாடு வீழ்ச்சியடையும் போது மக்கள் இறப்பதைத் தடுக்கும் புரட்சிகரமான சவாலை ஏற்றுக்கொண்டவர் ஜனாதிபதி ரணில் என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாயக்கார தெரிவித்தார்.

அம்பாறையின் இடம்பெற்ற 'ஸ்மார்ட் யூத் கிளப்' நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த காலங்களில் வடக்கு மற்றும் தெற்கில் உள்ள இளைஞர்களின் இலக்குகள் தவறான திசையில் திசைதிருப்பப் பட்டது இதனால் நாடு வீழ்ச்சியடைந்ததுடன், இளைஞர்கள் தமது ஆற்றலை சரியான திசையில் செலுத்த வில்லை நம்பிக்கை தனக்கு இருப்பதாக அமைச்சர் கூறினார்.

சேகுவேரா ஒரு புரட்சியாளர் ☞ 2

## வாக்குக்காக வருவோருக்கு கட்சியில் இனி இடமில்லை

### நாமல் திட்டவட்டம்

வாக்குகேட்பதற்காக மட்டும் பொது ஜன பெரமுனவுக்கு வருபவர்களுக்குக் கட்சியில் இடமில்லை என்று பொதுஜனபெரமுனவின் தேசிய அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமானநாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்றநிகழ்வொன்றின் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும்தெரிவித்ததாவது:

கட்சியின் கொள்கைகளை முன்னெடுத்துச் ☞ 9

## பேராயரும் வேறுசில அரசியலாளர்களும் என்னைக் கொல்லாமல் கொல்கின்றனர்

### முன்னாள் ஜனாதிபதி மைத்திரி புலம்பல்

பேராயர் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை மற்றும் சில அரசியல்வாதிகள் இணைந்து என்னை கொல்லாமல் கொல்கின்றனர் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால ☞ 8

## நல்லை ஆதீன குரு முதல்வருடன் அமைச்சர் விதுர கலந்துரையாடல்

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள புத்தசாசன, மத மற்றும் கலாசார விவகாரங்களுக்கான அமைச்சர் விதுர விக்ரமநாயக்க நல்லை ஆதீனத்துக்கு சென்று, அங்கு சமயத் தலைவர்களுடன் கலந்துரையாடினார்.

நல்லை ஆதீன குரு முதல்வர் சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியசுவாமிகள் முன்னிலையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் சிவபூமி அறக்கட்டளை அமைப்பாளர் கலாநிதி ஆறு. திருமுருகன், ரிஷிதொண்டுநாத சுவாமிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

குருந்தூர் ☞ 2

### கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரம்

## தமிழ் மக்கள் நேற்று வழிமறிப்பு போராட்டம்

கல்முனை வடக்கு பிரதேசசெயலகவிடயங்களுக்கு உடனடி தீர்வினை பெற்றுத் தருமாறு கோரி நேற்று ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளமையினால்மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியின் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டுள்ளதுடன் ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

இனிவரும் காலங்களில் அரச வைத்தியசாலைகளில் பணியாற்றுவதற்கு மருத்துவர்கள் இந்தநாட்டில் இருப்பார்களா என்கிற கேள்வி எழுந்திருக்கிறது. கடந்த இரண்டு வருடங்களில் மட்டும் 1800 வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதைவிட அதிர்ச்சிகரமான விவரம் இன்னும் 5000 வைத்தியர்கள் நாட்டைவிட்டு வெளியேறத்தயாராகிவருகின்றார்கள் என்கிற தகவல்தான். தேவையான பரீட்சைகளில் சித்தியடைந்து வெளிநாடு செல்வதற்கான தமது தகைமைகளைப்பூர்த்திசெய்வதில் இவர்கள்அவசரஅவசரமாகஈடுபட்டு வருகின்றார்கள் என்றும் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் டொக்டர் சமில் விஜேசிங்க தெரிவித்தார்.

வெளிநாடுகளுக்குச் செல்லும் வைத்தியர்கள் இலங்கையில் ஒரு வைத்தியரின் வருமானத்தை விட பத்துமடங்குவருமானம்ஈட்டமுடியும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. அந்த நாடுகளில் அவர்கள் உயர்தர வாழ்க்கையைஅனுபவிக்கின்றனர் எனவும், அதுவே வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு முக்கியக் காரணமாகின்றது எனவும் வைத்தியர் சமல் விஜேசிங்க தெரிவித்துள்ளார். இலங்கையில் குறைந்த சம்பளத்தைப்பெறுவது மட்டுமல்ல, அதற்கு உயர்ந்த வரியையும் செலுத்தவேண்டியிருக்கின்றது என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இப்படி அதலபாதாளத்தை நோக்கி விரைந்துகொண்டிருக்கும் நாட்டைத்தான் சரிவில் இருந்து தூக்கிநிறுத்தினேன் என்று மார்தட்டி வருகின்றார் ரணில்.

.....................................

ஒருபுறத்தில்உழைப்பாளர்களின் வருவாயை அதியுயர் வரி என்ற பெயரில் அரசே பிடுங்கிக் கொள்கின்றதுஎன்றால், மறுபுறத்தில் அரசின் வருவாயை ஒரு தரப்பு திருடிக்கொண்டேயிருக்கிறது.

அண்மையில் நாடாளுமன்ற கோப் குழுவில் நடத்தப்பட்ட விசாரணை ஒன்றின்போது நாளாந்தம் நெடுஞ்சாலைகளில் நடக்கும்பெரும்திட்டுஅம்பலத்திற்கு வந்துள்ளது.

நெடுஞ்சாலை காசாளர்களால் சேகரிக்கப்படும்வருவாயில்10%முதல் 20% வரை திருடப்படுவதாக கோப் குழுவிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. காசாளர்களின் வேலைநிறுத்தத்தின்போது அங்கு கடமையில் இருத்தப்பட்ட படையினர் திரட்டிய வருவாயுடன் ஒப்பிட்டதன் பின்னரே இந்தத் திருட்டு தெரியவே வந்துள்ளதாம்.

இப்படி மோசடி செய்த வர்கள் என்று 19 பேர் அடையாளப் படுத்தப்பட்டுள்ளனர் என்றும் கோப் குழுவிடம் தெரிவிக்கப்பட்டாலும் அவர்கள் மீது மோசடிக் குற்றச்சாட்டுக்கள் ஏதும் சுமத்தி நடவடிக்கை எடுக்க முடியாது என்றும் அதிகாரிகள் கையை விரித்துவிட்டனராம். ஏனெனில் இவர்களுக்கு மாற்றாக ஆட்களை எடுக்கமுடியாததேஇதற்குக்காரணம் என்றுநெடுஞ்சாலைகள்அமைச்சின் செயலாளர் கோப் குழுவிற்கு அறிவித்துள்ளார் (என்னே ஒரு நியாயம்).

அதிவேக நெடுஞ்சாலைகளில் உள்நுழையும் வாயில்களில் அதற்கான கட்டணங்கள் அறவிடப்படுகின்றன. ட்ரோல் கேற் எனப்படும் இந்த இடங்கள் சிசிரிவி கமெராக்கள் மூலம் கண்காணிக்கப்படுகின்றன. ஆனாலும் அந்தக் கமெராக்களின் வயர்களைச் சேதப்படுத்தியும் அறுத்தும் காணொலி பதிவை நிறுத்திய பின்னர் காசாளர்களால் மோசடி வெகுஜோராக நடத்தப்படுகிறதாம். ரணிலால்மீட்டெடுக்கப்பட்ட நாட்டில்தான் இப்படிமோசடிக்காரர்களைஅடையாளம்கண்டபின்னரும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கமுடியாது என்று சொல்ல முடியும் என்று தோன்றுகின்றது.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## நீதி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றத்தின்சட்டத்திற்கமைவான தீர்ப்புகள் காரணமாக அதிருப்தி அடைந்ததால் அமைச்சர் இவ்வாறு கருத்துதெரிவித்துள்ளதாகவேதமது கணிப்புகாணப்படுகிறது என அந்தச் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றத் தீர்ப்புகளால் திருப்தி அடையாதவர்கள் அரசமைப்பின் பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள மேன்முறையீட்டுநடைமுறைக்குச் செல்லாமல் நாடாளுமன்ற சிறப்புரிமைகளுக்குள் மறைந்து நீதிமன்றத்தை அவதூறு செய்வது ஜனநாயக சமூகத்தின் அடிப்படையான நீதிமன்ற சுயாதீனத்தன்மைக்கு பகிரங்கமாக விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பக்கச்சார்பற்ற நீதிபதிகளின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்துவதற்கானதிட்டமொன்றுபடிப்படியாக நடைமுறைப்படுத்தப்படடுள்ளதை தாம் அவதானிப்பதாக, இலங்கை நீதிச்சேவைகள் சங்கம் தெரிவித்துள்ளது.

நீதியமைச்சரின் இந்த கருத்துக்களின் இறுதி விளைவாக மக்களின் இறையாண்மை அதிகாரத்தைநடைமுறைப்படுத்தும் 3 முக்கிய நிறுவனங்கள் மீதான மக்களின் நம்பிக்கை அற்றுப்போவதைதவிர்க்க முடியாது என அந்த சங்கத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நாடு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தகவல்கள் வெளியாகியுள்ளன. இலங்கையை வங்குரோத்து நிலையிலிருந்து மீட்டுவிட்டதாக ஜனாதிபதி அன்று நாட்டு மக்களுக்கு அறிவிக்கவுள்ளார்.

கடந்த ஆண்டு மார்ச் 21 ஜனாதிபதி இப்படி மக்களுக்கு விசேட உரையாற்றினார். அதன் பின்னரே'வற்'வரிஅதிகரிக்கப்பட்டது. எனவே இம்முறையும் அவ்வாறு ஏதேனும் இடம்பெறுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. கடந்த ஆண்டு மார்ச்சில் நாடு வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டது. அவ்வாறெனில் இவ்வாண்டில் மீண்டும்எதற்காகஅந்த அறிவித்தல் வெளியிடப்படவுள்ளது?

வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டு விட்டதாக ஜனாதிபதியோ, நாடாளுமன்றமோ கூறமுடியாது. கடன் சுமையிலுள்ள நாடுகள் பட்டியலை வெளியிடும் மோடிஸ், பிட்ச் ரேட்டிங் உள்ளிட்ட சர்வதேச நிறுவனங்களே அதனை அறிவிக்க முடியும்.

ஜூலை 17 ஜனாதிபதித் தேர்தலுக்கானதினத்தைஅறிவிக்கும்அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெறும்.அதனைஅடிப்படையாகக் கொண்டே தற்போது ஒரு நாடகம் அரங்கேற்றப்படவுள்ளது. தேர்தல் தொடர்பில் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள சகல கருத்துகணிப்புக்களிலும்ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பின்தங்கிய நிலையிலேயே இருக்கின்றார். எனவே இதுவரையிலும் தேர்தலில் என்ன செய்வது என்று சிந்தித்துக் கொண்டிருக்கும் குழுவினரை தம் பக்கம் ஈர்ப்பதற்காகவே ஜனாதிபதி இந்த நாடகத்தை அரங்கேற்றுகின்றார் என்றார்.

## நல்லை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மலை மற்றும் வெடுக்குநாறி மலையில் சைவ மக்கள் சுதந்திரமான வழிபடுவதற்கு வகை செய்தல், காங்கேசன்துறையில் உள்ள ஆச்சிரமத்தின் காணி விடுவிப்பு, திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலய வளாகத்திலுள்ளபெட்டிக்கடைகளை அகற்றுதல்உள்ளிட்ட கோரிக்கைகள் இந்து சமய தலைவர்களினால் முன்வைக்கப்பட்டன.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, குருந்தூர் மலை, வெடுக்குநாறிமலைஎன்பன தொல்பொருள் திணைக்களக் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பினும் அனைத்து மதத்தவர்களும் பாரபட்சமின்றி சுதந்திரமாக வழிபட வழி செய்வதாக உறுதியளித்தார்.மேலும், திருகோணமலையில் உள்ள சிறு கடைகளை அகற்றல் மற்றும் காங்கேசன் துறையில்உள்ளசைவாச்சிரமத்தின் காணி விடுவிப்பு தொடர்பிலும் பரிசீலிப்பதாகவும்அவர்தெரிவித்தார்.

## தமிழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதற்ற நிலையும் காணப்பட்டது. பிரதேச செயலகத்தின் நுழைவாயிலையும் பூட்டிய நிலையில் அதிகாரிகளைஉள்நுழையவிடாமல் பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு எதிராக இடம்பெறும் நிர்வாக அடக்குமுறைகளை கண்டித்தும் அதற்கான உரிய தீர்வு கோரியும் தொடர்ச்சியாக 92 நாட்களாக போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் இதுவரை எந்தத் தீர்வும் வழங்கப்படவில்லை. இதனால் நேற்றுப் பெரும் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இந்த ஆர்ப்பாட்டம் காரணமாக மட்டக்களப்பு - கல்முனை வீதி தடைப்பட்டுள்ளதால் வாகனங்களை மாற்று வீதிகளில் அனுப்புவதற்குப் பொலிஸார் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

சுமார் 7 மணித்தியாலங்களாக கல்முனைநகர்போராட்டக்காரர்வசம் இருந்த நிலையில் கல்முனையில் வீதி மறியல் போராட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டு மாவட்டச்செயலாளர் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களிடையே கலந்துரையாடல் ஒன்று இடம்பெற அதிகாரிகளினால் ஏற்பாடு செய்யப்பட்டது.

காலை 8.00 மணி முதல் பி.ப 2 மணி வரை கல்முனை மாநகரம் ஸ்தம்பித்திருந்ததுடன், நகரில் இருந்து அனைத்து பொது போக்குவரத்துக்களும் தடைப்பட்டிருந்தது. மருத்துவசேவை வாகனங்கள் மாத்திரம் மக்களால் அனுமதிக்கப்பட்டிருந்தன.

அத்துடன், தமது நியாயமான கோரிக்கைக்கு பதில் என்ன? என்ற கோஷத்துடன் தமிழ் மக்கள் வீதியில் அமர்ந்தும் போராட்டம் செய்தனர். பின்னர் மாவட்டச்செயலர் பொலிஸாரின் மத்தியஸ்த்துடன் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களிடம் கேட்டுக்கொண்டதற்கிணங்க சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் எட்டுப் பேர் மாவட்ட செயலகத்துக்கு பேச்சுக்குச் சென்றனர்.

அதுவரை வீதி மறியல் போராட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. மேலும் வழமை போன்று கல்முனை வடக்கு பிரதேச செயலகம் முன்பாக சுழற்சி முறைப் போராட்டம் தொடர்கிறது.

## புரட்சிகரமான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனால்தான் அவரைப் படித்து நம்பும் இளம் தலைமுறையினர் இருக்கிறார்கள். ஒரு புரட்சியாளனுக்கு இருக்க வேண்டிய சிறந்த குணம் அன்பு என சேகுவேரா ஓர் பத்திரிகையாளரிடம் தெரிவித்தார்' எனவே ஒரு உண்மையான புரட்சியாளர் அன்பின் உயர்ந்த உணர்வுகளால் வழிநடத்தப்படுகிறார்.

மனிதகுலத்தின் அன்பு உணர்வுகளான நீதி, உண்மை. இந்த குணங்கள் இல்லாமல் ஒரு புரட்சியாளர் உருவாக மாட்டார். ஒரு புரட்சியாளர் மக்களை சுடலாம் ஆனால் மூளைச்சலவை செய்யலாம். அன்பின் உயர்ந்த உணர்வான உண்மையும் நிபந்தனையற்ற அன்பும் உலகை மாற்றும்.

நம் நாடு பொருளாதாரத்தில் வீழ்ந்தது, மக்கள்வரிசையில்நின்று இறந்தனர். மக்கள் இறப்பதைத் தடுக்கநாம்நம்மைஉண்மையான புரட்சியாளர்கள் என்று அழைக்க வேண்டும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கமற்றும்பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு அந்த சவாலை ஏற்றுக்கொண்டது. மக்களின் வேதனைகளையும், துயரங்களையும் கண்டு அவர் சவால்களை ஏற்றுக்கொண்டார்.

உண்மையான புரட்சியாளர்கள் சவால்களை ஏற்று மக்களுக்காக நின்றார்கள். மக்களை நேசிக்காதவர்கள், மக்கள் இறப்பதைப் பார்த்தவர்கள், மக்கள் இறந்தால் நாட்டைக் காப்போம், நாட்டுக்குபணம்அனுப்ப வேண்டாம் என்று சொன்னவர்கள் உண்மையில் புரட்சியாளர்களா? நீங்கள் உண்மையில் மக்களை நேசிக்கிறீர்களா?

2015 ஆண்டு ரணில் விக்கிரமசிங்க வினால் நமது நாட்டை வெறுப்பேற்று நாட்டு மக்களிடையே சகோதரத்துவத்தை ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டது. அது இல்லாவிட்டால் இன்று நாம் இப்படி மகிழ்ச்சியாக இருந்திருக்க முடியாது. அன்று சிறிய முடிவாக இருந்தாலும், இன்று நாட்டில் ஒற்றுமையை ஏற்படுத்தும் பெரிய முடிவு. இந்த நாடு சுதந்திரம் பெற்ற நாள் முதல் சிவப்பு சகோதரர்கள் முன்னோக்கி செல்ல விடாமல் இருந்தவர்கள்.

தற்போதுஎலோன்மஸ்க்கைஒரு பொருளாதார கொலையாளி என்று அழைக்கிறார்கள். இன்று, நாம் வரலாற்றிலிருந்து எதிர்காலத்திற்கு வந்துள்ளோம், எலோன் மஸ்க் போன்று இளைஞர்களை திறமைமிக்கவர்களாக சிறந்த தலைவர்களாக வலுப்படுத்த கிராமத்திலிருந்து தொழில்முறை பயிற்சிகளைவழங்குகிறோம். இந்த பொருளாதாரக் கொலைகாரர்கள் கூறுவதுபோல்நாட்டைபின்னோக்கி கொண்டு செல்வதற்காக அல்ல என்றும் அமைச்சர் கூறினார்.

## சு.கவிற்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றம் இது தொடர்பில் தீர்ப்பொன்றை வழங்கும் என எதிர்பார்க்கிறோம். கட்சியின் தலைமை அலுவலத்தை கைப்பற்றிக்கொண்டிருப்பதால், அவர்கள் யாரும் தலைவர்களாக முடியாது.

சுதந்திர கட்சி 1994இல் இருந்து 5 பொதுத் தேர்தல்களுக்கு முகம்கொடுத்தது, வெவ்வேறு இலச்சினைகளிலேயே தேர்தல்களுக்கு முகங்கொடுத்தது. கைச்சின்னம். கதிரை, வெற்றிலை, அன்னம், மொட்டு என பல சின்னங்களில்போட்டியிட்டிருக்கிறது. ஆனால் அதன் கொள்கையை விட்டுக்கொடுக்காமலேயே போட்டியிட்டுவெற்றிபெற்றிருக்கிறது.

அப்பட எதிர்வரும் தேர்தலிலும் சுதந்திரகட்சிகடந்தகாலசின்னத்தில் அல்லாது பொருத்தமான புதய சின்னத்தைஅறிமுகப்படுத்துவோம்.

நாட்டு வளங்களை விற்பனை செய்வதற்கு நான் எப்போதும் எதிராக இருந்தவன். கடந்த ஆளும் தரப்புக்காலத்தில் அம்பாந்தோட்டை துறைமுகத்தை விற்பனை செய்ய முற்படும்போது அதற்கு எதிர்ப்பு தெரிவித்து, நான் ஆளும் தர்பை விட்டுவெளியேறினேன். தற்போதும் அந்த நிலைப்பாட்டிலேயே இருக்கிறேன். என்றாலும் சில அரச நறுவனங்கள் நட்டத்தில் இயங்குகின்றன. அவற்றை லாபமீட்டும் நிறுவனங்களாக மாற்றியமைக்கநாங்கள்நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் நான் போட்டியிடுவேன். வெற்றியும் ஈட்டுவேன். நான் ஜனாதிபதியானதும். அரசமைப்பின் பிரகாரம் எனக்கு எதிராகத் தொடுக்கப்பட்டிருக்கும் அனைத்து வழக்கு நடவடிக்கைகளும் இரத்தாகும். அப்போது சுதந்திர கட்சியின் தலைமைத்துவம் தொடர்பில் எந்த பிரச்சினையும் எழப்போவதில்லை.

அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும். அரசமைப்புடன் விளையாட யாருக்கும் இடமளிக்கப் போவதில்லை. அதனால் இந்த வருடம் ஜனாதிபதி தேர்தலை நாங்கள் நடத்தியே ஆகுவோம். அதில் சந்தேகம் இல்லை என்றார்.

# நீர் வழங்கல் சபைக்கு ரூ. 5.2 பில். இலாபம்

தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை 2023 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் 5.2 பில்லியன் ரூபாவை இலாபமாக பெற்றுள்ளது.

கட்டண அதிகரிப்புக்குப் பின்னர், பெறப்பட்டுள்ள இந்த இலாபத்தால்,விநியோகிக்கப்படும் நீரில் 25 வீதத்துக்கு பணம் கிடைக்கவில்லை என்றும் சபை தெரிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டில் சபையின் மொத்த வருமானம் 35.4 பில்லியன் ரூபாயிலிருந்து 61.8 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளதாக நிதி அமைச்சின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நீர் விநியோகம் மூலமான வருமானம் 33.1 பில்லியன் ரூபாவிலிருந்து 58.5 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது. இந்தக் காலப்பகுதியில் விநியோகச் செலவு 23.14 பில்லியன் ரூபாயிலிருந்து 32.8 பில்லியன் ரூபாயாக அதிகரித்துள்ளது.

இதேவேளை மொத்த இலாபத்தை 12.3 பில்லியன் ரூபாவிலிருந்து 29 பில்லியன் ரூபாவாக அதிகரிக்க உதவியுள்ளது. நிதிச் செலவுகள் 3.9 பில்லியன் ரூபாவிலிருந்து 14.9 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளன.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை வருடாந்த நிகர இலாபம் 5.2 பில்லியன் ரூபா. அதற்கு முன்னைய ஆண்டு 2.7 பில்லியன் ரூபா நட்டத்தை சபை எதிர்நோக்கியிருந்தது.

## பதவி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கும் திட்டத்தைச் சுட்டிக்காட்ட முடியும். பெப்ரவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தில் இதுவரை 50,000 இற்கும் மேற்பட்டோருக்கு காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

உறுமய திட்டத்தின் மூலம் 20 இலட்சம் முழு உரிமையுள்ள காணி உறுதிகள் வழங்க எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் மக்களிடம் இது பற்றிய சரியான புரிதல் இல்லை என்று தெரிகிறது. அதனாலேயே இவர்களது மானியப் பத்திரங்களை பிரதேச செயலகத்தில் ஒப்படைத்து காணி உறுதிப் பத்திரங்களாக மாற்றும் செயற்பாடுகள் மந்தமான நிலையில் நடைபெறுகின்றன. இது குறித்து மக்களுக்கு தெளிவுபடுத்தும் வகையில் நடமாடும் சேவையை இந்த வாரம் முதல் ஆரம்பிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

பேரூந்துகள் மூலம் பிரதேச செயலக மட்டத்தில் மக்களுக்கு அறிவித்து உறுமய காணி உறுதிப்பத்திரங்கள் விநியோகத்தை துரிதப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் வடமேல் மாகாணத்தில் 12,000 காணிஉறுதிப்பத்திரங்களும், மாத்தறை மாவட்டத்தில் 12,000

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# மாணவனைத் தாக்கிய சம்பவத்தில் கல்வி கற்கும் 8 மாணவர்கள் கைது

## ஒரே பாடசாலையைச் சேர்ந்தவர்களாம்

அநுராதபுரம், பரசங்கஸ்வெள பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் 15 வயது மாணவனைத் தாக்கிய சம்பவத்தில் அதே பாடசாலையில் கல்வி கற்கும் எட்டு மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பரசங்கஸ்வெள பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மெதகம, அம்பஸ்வெள மற்றும் பரசங்கஸ்வெள பிரதேசங்களைச் சேர்ந்த 10 ஆம் தரத்தில் கல்வி கற்கும் 15 வயதுடைய 8 மாணவர்களே ,வ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சியபலகஸ்வெள, பரசங்கஸ்வெள பிரதேசத்தில் வசிக்கும் அதே பாடசாலையில் தரம் 10 இல் கல்வி கற்கும் 15 வயதுடைய மாணவனே தாக்கப்பட்டுள்ளார் .

தாக்குதலுக்குள்ளான மாணவன் சிகிச்சைக்காக அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

தாக்குதலுக்குள்ளான மாணவனின் பெற்றோர் பொலிஸில் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேகத்திற்குரிய மாணவர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த 21 ஆம் திகதி பாடசாலையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் காரணமாக சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட 8 மாணவர்கள் ,ந்த மாணவனை தாக்கினர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)



# ஊடகவியலாளரின் வீட்டைத் தாக்கியவர்களும் செய்வித்தவர்களும் கைதுசெய்யப்படவேண்டும்

## சுமந்திரன் எம்.பி. வலியுறுத்து

ஊடகவியலாளரின் வீட்டை தாக்கியவர்களும் அதனை செய்வித்தவர்களும் உடனடியாகக் கைதுசெய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

கடந்த 13 ஆம் திகதி அச்சுவேலியைச் சேர்ந்த ஊடகவியலாளர் தம்பித்துரை பிரதீபனின் வீடு தாக்கப்பட்டு வாகனங்களும் எரியூட்டப்பட்டமை தொடர்பில் சுமந்திரன் ஞாயிற்றுக்கிழமை நேரில் சென்று பார்வையிட்டார். இதன்போது அவர் கருத்து தெரிவிக்கையில் -

ஊடகவியலாளர் ஒருவரின் வீட்டுக்கு தாக்குதலை மேற்கொண்டமை மிலேச்சத்தனமானதும் கண்டிக்கத்தக்கதுமான விடயமாகும். எனவே, ,தற்குப் பொறுப்பானவர்களும் ,தனை செய்வித்தவர்கள் எவரும் ,துவரை கைது செய்யப்படவில்லை. ,ந்த விடயத்தை செய்தவர்களும் செய்வித்தவர்களும் உடனடியாக கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். - என்றார். (05)

# பொலிஸ் அதிகாரி கடமைக்கு இடையூறு விளைவித்த பொலிஸ் சார்ஜன்ட் கைது

மஹரகம, பன்னிப்பிட்டிய பிரதேசத்தில் பொலிஸ் அதிகாரிகளின் கடமைகளுக்கு ,டையூறு விளைவித்த குற்றச்சாட்டில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என மஹரகம பொலிஸார் தெரிவித்தனர்.

ஹினிதும பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் அவசர தொலைபேசி ,லக்கமான 119 ,ற்கு நபர் ஒருவர் குடிபோதையில் தகராறு செய்வதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் மஹரகம பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது ,வர் கைது செய்யப்பட்டுள்ளார் .

சந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட போது அவர் ஹினிதும பொலிஸில் கடமையாற்றும் பொலிஸ் சார்ஜன்ட் எனத் தெரியவந்துள்ளதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# 80 லட்சம் ரூபாய் பணம் இளைஞனிடம் மோசடி

## லண்டன் பிரஜை கைது

லண்டனில் வேலை பெற்றுத் தருவதாகக் கூறி யாழ்ப்பாண ,ளைஞனிடம் 80 லட்சம் ஷரூபாவைப் பெற்று, மோசடி செய்த லண்டன் பிரஜாவுரிமை பெற்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான நபர் அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்தவேளை, லண்டனில் உள்ள பலபொருள் அங்காடியொன்றில் வேலை பெற்றுத் தருவதாகக் கூறி யாழ்ப்பாணத்தை சேர்ந்த ,ளைஞனிடம் 80 லட்சம் ரூபா பணத்தைப் பெற்றுள்ளார்.

பணத்தைப் பெற்றுக்கொண்ட சந்தேக நபர், ,ளைஞனை லண்டனுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை எடுக்காததால், சந்தேகம் கொண்ட ,ளைஞன் தனது பணத்தை மீளத் தருமாறு கோரியுள்ளார்.

எனினும், அந்த லண்டன் பிரஜை பணத்தை திருப்பித் தராததால் ,ளைஞன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து, பொலிஸாரால் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெளிநாடுகளில் பிரஜாவுரிமை பெற்றவர்கள் வெளிநாடுகளில் வேலை பெற்றுத் தருவதாக யாழ்ப்பாண ,ளைஞர்கள், யுவதிகளை ,லக்கு வைத்து பண மோசடியில் ஈடுபட்டுவரும் சம்பவங்கள் யாழ்ப்பாணத்தில் அதிகரித்து வருவதாகவும், ,து தொடர்பில் விழிப்பாக ,ருக்குமாறும் பொலிஸார் பொது மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர். (05)

# கையடக்கத் தொலைபேசி யாழ்ப்பாணத்தில் திருட்டு

## இருவர் கைது

மிகவும் பெறுமதியான கையடக்க தொலைபேசியை திருடிய குற்றச்சாட்டில் ஒரு பெண்ணையும், அதனை வாங்கிய குற்றத்தில் ,ளைஞர் ஒருவரையும் யாழ்ப்பாண பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாண பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் தனது கையடக்க தொலைபேசி திருடப்பட்டதாக பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில், திருடப்பட்ட கையடக்க தொலைபேசியோடு ,ளைஞரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அதன் பின்னர், ,ளைஞரை விசாரிக்கையில், தனக்கு அந்த தொலைபேசியை ஒரு பெண்ணே விற்பனை செய்தார் எனப் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

அதனையடுத்தே, கைப்பேசியை திருடிய பெண்ணை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்நிலையில், கைதான ,ருவரையும் பொலிஸார் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்து விசாரித்து வருகின்றனர். (05)

# யாழ்.பொலிஸ் நிலையத்தில் தஞ்சமடைந்துள்ள சிறுவன்

## கொழும்பைச் சேர்ந்தவராம்

*தனது தாயும் சித்தப்பாவும் தன்னை அடித்து துன்புறுத்துவதாகக் கூறி கொழும்பை சேர்ந்த 16 வயதுடைய சிறுவன் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் தஞ்சமடைந்துள்ளான்.*

*கொழும்பில் தனது தாய் மற்றும் சித்தப்பா (தாயின் இரண்டாவது கணவர்) ஆகியோர் அடித்து துன்புறுத்துவதால் வீட்டை விட்டு வெளியேறி யாழ்ப்பாணம் வந்ததாகவும் , யாழ்ப்பாணத்தில் வேறு நபர்களைத் தெரியாத காரணத்தால் பொலிஸ் நிலையத்தில் தஞ்சம் கோரி வந்தார் எனவும் சிறுவன் தெரிவித்துள்ளான். இது தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (05)*

# ஜெயகமு ஸ்ரீலங்கா திட்டம் அம்பாறையில் தொடக்கம்

(பாறுக் ஷிஹான்)

'ஜெயகமு ஸ்ரீலங்கா அம்பாறை' மாவட்ட அங்குரார்ப்பண நிகழ்ச்சித் திட்டம் சனிக்கிழமை தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் அனுசரணையுடன் அம்பாறை எச்.எம். வீரசிங்கமைதானவளாகத்தில் சமூக அபிவிருத்தி மற்றும் வலுவூட்டல் அமைப்பின் உறுப்பினர் ராம் நிக்கலஸின் ஏற்பாட்டில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தலைமையில் ஆரம்பமானது.









நிகழ்ச்சித் தொடரின் முதற்கட்டமாக வெளிநாட்டில் பணிபுரிந்து இலங்கைக்கு வந்த தொழிலாளர்கள் மற்றும் வெளிநாட்டில் பணிபுரியும் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு நன்மைகள் வழங்கும் வகையில் 'புலம்பெயர்ந்த தொழிலாளர் போக்குவரத்துத் திட்டம்' நடைபெற்றது. மேலும் சுயதொழில் மேம்பாட்டிற்கான மானியத்தின் முதற்கட்டமாக 19 புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு தலா 50,000 ரூபா நிதியுதவி வழங்கப்பட்டது.

அத்துடன் வெளிநாட்டில் இருந்து நாடு திரும்பிய 08 மாற்றுத்திறனாளிகளுக்கு நிதியுதவி புலம்பெயர்ந்த தொழிலாளர் சமுதாயத்தைச் சேர்ந்த 240 குழந்தைகளுக்கு புலமைப்பரிசில் உதவித்தொகை, 520 சிறுவர்களுக்கு பாடசாலை உபகரண பைகள், 100 தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு சதொச வவுச்சர்கள், பரிந்துரையின் அடிப்படையில் 20 பாடசாலைகளுக்கு ஸ்மார்ட் போர்டுகள் வழங்கப்பட்டன. சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை இரு தினங்களில் நடைபெறுவுள்ள 'ஜெயகமு ஸ்ரீலங்கா அம்பாறை' மாவட்ட நிகழ்ச்சியில், புலம்பெயர்ந்தோர் சங்க கலந்துரையாடல், கருசரு, ஸ்மார்ட் வாடோ, ஷ்ரம வசன உதவித் திட்டங்கள் தவிர, ஆள் கடத்தல் மற்றும் உழைப்பு குறித்தும் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவுள்ளன. இதற்கு மேலதிகமாக, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலையங்கள் தொடர்பான ஆய்வுக்கூடங்களில் அமைச்சர் பங்கேற்று பல்வேறு ஆலோசனைகளையும் குறைநிறைகளையும் கேட்டறிந்து கொண்டார். இந்நிகழ்வில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் ஜகத் புஸ்பகுமார, அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் - நாடாளுமன்ற உறுப்பினர் டபிள்யூ.டி. வீரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாரச்சி, முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் தயா கமகே, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீயானி விஜேவிக்ரம, அமைச்சின் செயலாளர் ஆர்.பீ.ஏ. விமலவீர, அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபயவிக்ரம, அமைச்சின் மேலதிக செயலாளர் மங்கள கருணாதிலக்க, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவர் ஹில்மி அஸீஸ், மனிதவள மற்றும் பாதுகாப்பு திணைக்கள பணிப்பாளர் நாயகம் கே.ஜி.எச்.என்.ஆர். கிரியெல்ல, பொலிஸ் அத்தியட்சகர் ஜே.எச்.எம்.என். ஜெயபத்ம, அமைச்சின் இணை நிறுவனங்களின் அதிகாரிகள், மாவட்டத்தின் பிரதேச செயலாளர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், அரச ஊழியர்கள் மற்றும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் குடும்ப உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அமைச்சரின் பயனற்ற சந்திப்பு

புத்தசாசன, மத மற்றும் கலாசார விவகாரங்களுக்கான அமைச்சர் விதுர விக்ரமநாயக்க பெரும் ஆரவாரங்கள் இன்றி யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ளார். இந்தப் பயணத்தில் அவர் நல்லை ஆதீனத்துக்கு சென்று, அங்கு சைவ சமயத் தலைவர்களுடன் கலந்துரையாடினார். தீவிர பௌத்தக் கொள்கைகளை உடையவரான அமைச்சர் தேர்தல் நெருங்கிவரும் நேரத்தில் இப்படித் திடீரென வருகை தந்து இந்து மதத் தலைவர்களைச் சந்தித்திருப்பது கவனத்திற்குரியது.

இந்தச் சந்திப்பின்போது குருந்தூர் மலை மற்றும் வெடுக்குநாறி மலை ஆகியவற்றின் வழிபாட்டுரிமை பற்றி சைவத் தலைவர்கள் அமைச்சரிடம் கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர். அது தவிர காங்கேசன்துறையில் உள்ள ஆச்சிரமத்தின் காணி விடுவிப்பு, திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலய வளாகத்திலுள்ள பெட்டிக் கடைகளை அகற்றுதல் உள்ளிட்ட கோரிக்கைகள் சமயத் தலைவர்களினால் முன்வைக்கப்பட்டன.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, குருந்தூர் மலை, வெடுக்குநாறி மலை என்பன தொல்பொருள் திணைக்களக் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பினும் அனைத்து மதத்தவர்களும் பாரபட்சமின்றி சுதந்திரமாக வழிபட வழி செய்வதாக உறுதியளித்தார் என்று சொல்லப்படுகின்றது. மேலும், திருகோணமலையில் உள்ள சிறு கடைகளை அகற்றல் மற்றும் காங்கேசன்துறையில் உள்ள சைவாச்சிரமத்தின் காணி விடுவிப்பு தொடர்பிலும் பரிசீலிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பௌத்த தீவிரப் போக்குடையவரான அமைச்சர் விதுர, இலகுவில் மற்றைய மதங்களுடைய கோரிக்கைகளுடன் இணங்கிப் போபவரில்லை. இப்போதும் நல்லை ஆதீனத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் வழங்கப்பட்ட உறுதிமொழிகளை அமைச்சர் காப்பாற்றுவார் என்று நிச்சயப்படுத்த முடியாது. ஏனெனில் அவரது அமைச்சுக்குக் கீழ்வரும் தொல்பொருளியல் திணைக்களம் மற்றும் புத்த சாசனம் ஆகிய இரண்டும்தான் இன்றைய நிலையில் தமிழ் மக்களுக்கு வெளிப்படையான அச்சுறுத்தலாக இருந்து வருகின்றன. இவை தமிழ் மக்கள் மீது கலாசார ஆக்கிரமிப்பை நிகழ்த்தி வருகின்றன. தமிழ் மக்களின் குடிப்பரம்பலுக்கும் அச்சுறுத்தலாக இருந்து வருகின்றன. ஓர் அமைச்சராக அவற்றின் செயல்பாடுகள் தனக்குத் தெரியாது என்று அவர் மறுக்க முடியாது. இன்னும் சொல்லப் போனால் அமைச்சராக அவர் தம் மீது நடவடிக்கை எடுக்கமாட்டார் என்கிற நம்பிக்கையில்தான் அவர்கள் இந்த நடவடிக்கையிலேயே ஈடுபடுகின்றனர்.

இந்த நிலையில் அமைச்சரின் வருகையும் சைவ சமயத் தலைவர்களுடனான அவரது சந்திப்பும் வெறுமனே தேர்தல்கால சாகச நிகழ்ச்சிகளே தவிர, அதனால் எந்தப் பயனும் இருக்காது.



## காலத்தை வென்று , காவியமாக வெற்றித் திருமகனாக விளங்குகின்றான் கண்ணதாசன் !

மகாதேவஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண் .. ஆஸ்திரேலியா

காலத்தை வென்றவன்.காவியம் ஆனவன். வேதனை தீர்ப்பவன். வெற்றித்திருமகன் எனப் பலவித முகங்களில் கண்ணதாசனை நான் பார்க்கின்றேன்.சிறுகூடல் பட்டி என்னும் சிறிய கிராமத்தில் பிறந்து சிந்தனைகளின் ஊற்றாக புறப்பட்டவர்தான் கவி அரசர்.முத்தையா- கண்ணதாசன் ஆனதே ஒரு முக்கிய சம்பவம்தான். 'முத்தைத்தரு' என்று அருணகியாரைப் பாடவைத்து - அவரது வாழ்க்கையையே மாற்றியது ஆண்டவ னது அனுக்கிரகம். முத்தையா என்று தந்தை வைத்தபெயரும்அவரைச் சமூகத்தில் ஒரு முத்தாகவே மிளிரச்செய்தது.கண்ணதாசன் என்னும் பெயரும் அவருக்குஉலகில் பெரும் புகழைத்தேடித்தந்தது.இவையாவும் ஆண்டவனின் அனுக்கிரகத்தால் ஆகியிருக்கலாம் என எண்ணத்தோன்றுகிறது. அருணகிரியார் முருகன் அருள் பெற்றதால் மடைதிறந்த வெள்ளமெனச் சந்தப்பாடல்கள் வந்து குவிந்தன. எங்கள் கவியரசரும் ஆண்டவனின் வரம்பெற்று வந்தவராகையால் கம்பனுக்குப் பிறகு 'சந்தத்தை' தமிழில் கையாண்ட பெருமைக்கு உரியவர் ஆகின்றார்.

நெற்றியில் விபூதியும், வாயிலே முருகனது நாமத்தையும் துணையென எண்ணி இருந்தவர் கண்ணதாசன். சேரக்கூடாத கூடாரத்துக்குள் சேர்ந்ததால் அவரின் பேச்சும் போக்கும் , ஏன் எழுத்தும்கூட மாறியது. ஆனால்அவரின்அடிமனத்தில் ஆழமாகப் பதிந்து நின்ற ஆண்டவன் நினைப்பு மட்டும் அப்படியேதான் அடங்கிக்கிடந்தது. காலமும்கனிந்துவரக்கடவுள்நம்பிக்கைகண்ணதாசனிடம் மேலோங்கத்தொடங்கியது.

நாத்திகம் பேசி நாத்தழும் பேற்றியும், கடவுள்



கண்டனம் செய்தும் நின்ற கண்ண தாசன் கடவுளே கதியென்னும் நிலைக்கு வந்து விட்டதை அவர் வாயிலாகவே நாங்கள் அறிந்து கொள்ளமுடிகிறது.' நாத்தினாக இருந்தது இரண்டு, மூன்று , ஆண்டுகளே ' கந்தபுராணம் , பெரியபுராணம், கம்பராமாயணம், திருவாசகம், திருப்பாவை, நாலாயி ரத்திவ்யபிரபந்தம், வில்லிபாரதம் ,இவற்றை எல்லாம் கண்டனம் பண்ணப் படித்தேன் ஆனால் அவற்றைப் படிக்கப் படிக்க என்மனம் அவற்றில் ஆழ்ந்து விட்டது என்று அவரே சொல்லுகின்றார்.' நாத்திக வாதம் என்பது அரசியல் நோக்கங் கொண்டது என்பதையும், உள்மனத்தின் உண்மையான உணர்வல்ல என்பதையும் உணர்ந்தேன் 'என்பது கண்ண தாசனின் வாக்குமூலமாகும்.

கண்ணதாசன் அடிக்கடி விரும்பிக் கேட்கும் பாடல் என்ன தெரியுமா ? 'திருப்பாற் கடலில் பள்ளி கொண்டாயே ஸ்ரீமன் நாராயணா 'என்பதாகும்.அவரின்படுக்கைஅறையில்வைத்திருந்த ஒரே படம் 'கிருஷ்ணர்' படமாகும்.



இந்தியாவிலே கடவுளை நம்பாதவர்கள் ஒரு கட்சியாகக் கூட இருந்தாலும் அவர்கள் எல்லோரும் சேர்ந்து கடவுளைக் கண்டனம் செய்தாலும் அதனால் கடவுளுக்கு எந்தவித வருத்தமும் இல்லை. அதே வேளை கடவுள் நம்பிக்கையும் இல்லாமற் போய்விடவும் இல்லை.இதில் கண்ணதாசன் மிகவும் நம்பிக்கை உடை யவராக இருந்த படியால்த்தான் படித்தவர்களும் போற்றுகிறார்கள் பாமரரும் போற்று கிறார்கள் என எண்ணத்தோன்றுகிறது.

கடவுளைப்பற்றி சந்தேகம் வருபவர்களுக்கு

' தெய்வம் என்றால் அது தெய்வம்
வெறும் சிலை என்றால் அது சிலைதான்
உண்டென்றால் அது உண்டு
இல்லை என்றால் அது இல்லை' என்று

சொல்லும் விளக்கத்தைவிட வேறு எப்படிச் சொல்லமுடியும். இதுதான் கண்ணதாசன்.

சினிமாவுக்கு என்று எழுதப்பட்டாலும் உள்ளத்தில் இருப்பதுதானே வரமுடியும்.

' பூஜ்ஜியத்துக் குள்ளே ஒரு ராஜ்ஜியத்தை
ஆண்டுகொண்டுபுரியாமலேஇருப்பான்ஒருவன்
அவனைப் புரிந்து கொண்டால்
அவன்தான் இறைவன்'

பாமரரும் புரியும்படி கடவுள் தத்துவத்தைக் காட்டுவது அவரின் தனித்துவம்தானே.

ஆண்டவனின் அருள் அவருள் உறைந்து கிடந்தமையால்த்தான் அவரின் வார்த்தை களில் அத்வைதம் இருந்தது. துவைதம் இருந்தது.விசிட்டாத்வைதமும் இருந்தது.வேதாந் தமும் சைவசித்தாந்தமும் கூட இருந்தது எனலாம்.சரஸ்வதி அவரது நாவிலே சம்மா ணம் போட்டே இருந்தாள்.மேலே காட்டிய தத்துவங்களை எவ்வாறு நாசூக்காகக் கண்ணதாசன் காட்டுகிறார் பாருங்கள்.....

' தெளிவாகத் தெரிந்தாலே சித்தாந்தம்
அது தெரியாமல் போனாலே வேதாந்தம்
மண்ணைத்தோண்டி கண்ணீர் தேடும்
அன்புத்தங்கச்சி
என்னைத் தோண்டி ஞானம் கண்டேன்
இதுதான் என்கட்சி
உண்மை என்ன பொய்மை என்ன
இதில் தேன் என்ன
கடிக்கும் தேள் என்ன ஞானப் பெண்ணே

தெய்வம் தந்த வீடு வீதி இருக்கு
இந்த ஊரென்ன
சொந்த வீடென்ன ஞானப் பெண்ணே
வாழ்வின் பொருளென்ன
நீ வந்த கதை என்ன'

சகல வித தத்துவங்களும் இங்கே பாமரரரும்

காலைக்கதிர் Kalaikkathir

# மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலய நிர்வாகத் தெரிவு

(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்றுப்பிரசித்தி பெற்ற மாட்டுப்பளை மடத்தடி மீனாட்சிஅம்மன் ஆலயத்தின் புதிய தலைவராக பிரபல சமூகசேவையாளரும், இலங்கை தமிழரசுக் கட்சியின் காரைதீவு பிரதேச தலைவரும், முன்னாள் காரைதீவு பிரதேசசபைத் தவிசாளருமான கலாநிதி கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் மீண்டும் ஏகமனதாகத் தெரிவு-செய்யப்பட்டார்.



ஆலயத்தின் வருடாந்த பொதுச்சபைக்கூட்டம் கடந்த சனிக்கிழமை மீனாட்சி அம்மன் பழைய சந்நிதானத்தில் பரிபாலன சபையின் ஆலோசகரும் புதிய நிருவாக சபைதெரிவுக்கான தற்காலிக தலைவருமான விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா தலைமையில் நடைபெற்றது.

அச்சமயம் புதிய நிருவாக சபை முறைப்படி தெரிவு செய்யப்பட்டது.

கடந்த 10 வருடங்களுக்கு பின்னர் நடைபெற்ற இப் பொதுக் கூட்டம்

ஆலய குரு சிவஸ்ரீ சபா.கோவர்த்தன சர்மா, அம்பாறை மாவட்ட இந்து கலாசார உத்தியோ-கத்தர் கு.ஜெயராஜி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

முன்னதாக இதுவரை இறைபதமடைந்த முன்னாள் தலைவர் கோ.கமலநாதன், வி-னாயகமூர்த்தி, முத்தையா மற்றும் உறுப்பினர்கள் மறைவையிட்டு 2 நிமிடநேரம் மௌன ஆத்மா-ஞ்சலி நடத்தப்பட்டது.

புதிய பரிபாலன சபை வருமாறு:

தலைவராக கி.ஜெயசிறில் செயலாளராக த.சண்முநாதன் பொருளாளராக அ.சுந்தரராஜன் தெரிவு செய்யப்பட்டனர். மூவருக்கும் முறைப்படி உரிய ஆவணங்கள் கையளிக்கப்பட்டன.

உபதலைவர்களாக பி.சண்முகராசா, ஏ.காரா ளசிங்கம், கே.கணேசன், உப செயலாளராக எஸ். சிறிகாந்தன் மற்றும்

கணக்காளர்களாக கே.உமாரமணன், கே. குழந்தைவடிவேல் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

ஆலோசகர்களாக வி.ரி.சகாதேவராஜா, சி.அரி யநாயகம் ஆகியோர் சபையால் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

நிருவாக சபை உறுப்பினர்களாக அம்பாறை மாவட்டத்தின் சகல தமிழ்ப் பிரதேசங்களிலிருந்-தும் 21 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

1999 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட யாப்பில் சில ஷரத்து மாற்றங்களுக்கான முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டன.

பின்னர் ஆலயபரிபாலனசபையின் நிருவா-கசபை உறுப்பினர்கள் தத்தமது கருத்துக்களை வெளியிட்டனர்.

மீண்டும் தலைவராக தெரிவுசெய்யப்பட்டதையிட்டு பலரும் ஜெயசிறிலுக்கு வாழ்த்துக்களைக்கூறினர்.

(05)

# சாரதியின் கட்டுப்பாட்டை மீறிய 'கப்' வாகனம் தூணில் மோதியது





கிளிநொச்சி பொலீஸ் பிரிவுக்குட்பட்ட கனகபுரம் வீதியில் ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் சாரதியின் கட்டுப்பாட்டை மீறிய கப்ரக வாகனம் அருகில் உள்ள இலங்கை தொலைத் தொடர்பு வளையமைப்பு-கள் பொருத்திய தூணில் மோதி விபத்துக்குள்ளானது.

இரண்டு தொலைதொடர்பு தூணங்கள் சேதத்துக்கு உள்ளாக்கப்பட்-தோடு வளைய அமைப்பு வயர்களும் சேதமாகப்பட்டமையால் அந்த வீதியூடாக செல்கின்ற வலை அமைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

இந்த விபத்து தொடர்பான மேல-திக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகிறார்கள்.

(05 - 113)


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்

(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)



பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சநேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி

முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை

தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு

மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி

உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்

தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்

சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-

பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with Vegitable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swehpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# கிரிகெட் சுற்றுப்போட்டி






பாலமுனை சுப்பர் ஓர்கிட் விளையாட்டுக்கழகத்தின் 37 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்த மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி பாலமுனை ஹிக்மா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது. கழகத்தின் தலைவர் ஜே.அமீன் தலைமையில் இடம்பெற்ற இச்சுற்றுப் போட்டியின் இறுதி போட்டிக்கு அக்கரைப்பற்று லீ ஸ்டார் மற்றும் டீன்ஸ் ஸ்டார் விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றி லீ ஸ்டார் கழகம் வெற்றி பெற்றது.

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த முன்னணி கழகங்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் சர்வதேச விவகாரங்கள் பணிப்பாளரும், மெட்றோபொலிடன் கல்லூரியின் தவிசாளருமான கலாநிதி சிராஸ் மீராசாஹிப் பிரதம அதிதியாகவும்,அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் எம்.ஏ.அன்சில், கழகத்தின் ஆலோசகரும்,அதிபருமான பீ.முஹாஜிரின், பாலமுனை மு.கா. அமைப்பாளர் அலியார் ஆகியோர் கௌரவ அதிதியாகக் கலந்துகொண்டு வெற்றி பெற்ற கழகத்தினருக்கு வெற்றிக்கேடயங்களை வழங்கி வைத்தனர். (05)

# சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் புதியவைத்திய அத்தியட்சகருக்கு வரவேற்பு




(வி.ரி. சகாதேவராஜா)

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் புதிய வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி டாக்டர் தர்மலிங்கம் பிரபாசங்கருக்கு அங்கு பணிபுரியும் தாதிய உத்தியோகத்தர்கள் பெரு வரவேற்பளித்தனர்.

தாதியர் சங்கப் பிரதிநிதிகளான எஸ்.சந்திரகுமார், எம்.அன்வர், ஏ.பரீஷ் ஏ றசூல் உள்ளிட்ட தாதிய உத்தியோகத்தர்கள் புதிய வைத்திய அத்தியட்சகர் டாக்டர் பிரபா சங்கருக்கு மாலை சூட்டி வரவேற்றார்கள்.

இந் நிகழ்வு வைத்திய சாலையில் நடைபெற்றது.

அவர்களுடனான சந்திப்பும் இடம்பெற்றது. புதிய வைத்திய அத்தியட்சகர் குறைநிறைகள் தொடர்பாக தாதிய உத்தியோகத்தர்களிடம் கேட்டறிந்தார். சம்மாந்துறை மண் சார்பில் பொன்னாடை போர்த்தி கௌரவிப்பும் இடம் பெற்றது.

ஏலவே வைத்தியசாலை அபிவிருத்திக் குழு அவரை வாழ்த்தி வரவேற்றது.

காரைதீவைச் சேர்ந்த வைத்திய கலாநிதி டாக்டர் பிரபாசங்கர் முன்னதாக ஆரையம்பதி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியாக கடமையாற்றி இருந்தார்.

இருவருட வைத்திய நிருவாக துறை பட்டப்பின் பயிற்சி முடித்து வைத்திய அத்தியட்சகராக தெரிவாகிய முதல் காரைதீவு வைத்தியர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் பிரபல பல் வைத்திய அதிகாரி டாக்டர் தர்மலிங்கம் உமாசங்கரின் சகோதரராவார். (05)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்

SUPERMARKET

4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557

## பதவி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணி உறுதிப்பத்திரங்களும் வழங்கும் பணிகள் அடுத்த சில தினங்களில் நிறைவடையும்.

சுற்றுலாத் துறையைப் பற்றி நாம் கூறினால், இந்த ஆண்டு 990,000 இற்கும் அதிகமான சுற்றுலாப்பயணிகள்எமதுநாட்டிற்கு வருகை தந் ள்ளனர். இலவச விசா வழங்கும் முறை குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையும் விரைவில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட உள்ளது. அதன்பிறகு இலவச விசா வழங்கும் முறையை அமுல்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது.

இதன்மூலம்சுற்றுலாத்துறையின் விரைவான வளர்ச்சியை ஏற்படுத்த முடியும். சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் இதுவரை 05 உலகளாவிய விளம்பரத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. சீனா, ஜப்பான், இந்தியா மற்றும் ஐரோப்பாவிற்கு தனித்தனியான உலகளாவிய விளம்பர திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளன. சுற்றுலாப் பயணிகள் மத்தியில் இலங்கையை பிரபலப்படுத்த .'ஆரளவ ஏளைவை' பெயரில் புதிய வேலைத்திட்டம் ஒன்றும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சுற்றுலா அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டு வரும் ஊக்குவிப்புத் திட்டங்களின் காரணமாக, உலகின் முதல் பத்து சுற்றுலாத் தலங்களுக்குள் இலங்கையையும் கொண்டு வர முடிந்துள்ளது. இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளில் 33மூ பேர் மீண்டும் இலங்கைக்கு வருகை தருகின்றனர். அந்தச் சூழல் சுற்றுலாத் துறையின் ஒரு நல்ல போக்காகும். எனவே, கடல்சார் சுற்றுலாத்துறையைமேம்படுத்தவும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதேநேரம் திருகோணமலை மற்றும் அறுகம்பே பகுதிகள் கடல்சார் சுற்றுலாத் துறையின் கேந்திர மையமாக மாற்றவும் திட்டமிடப்பட்டுள்ளது. சுற்றுலாத் துறையைமேம்படுத்தும்வகையில் விரைவில் உள்நாட்டு விமான சேவையொன்றை ஆரம்பிக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய விளையாட்டு சட்டம் அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட உள்ளது. இலங்கையில் 73 விளையாட்டுகள்உள்ளன. புதியகிரிக் கெட் சட்டம் அனைத்து விளையாட் டுகளுக்கும் செல்லுபடியாகும். கிரிக்கெட் விளையாட்டிற்கு பல்வேறு கருத்தகளைத் தெரிவித்து வீரர்களின்மனநிலையைபாதிக்கும் வகையில்சிலகுழுக்கள்செயல்பட்டு வருகின்றன.

இந்த வருடம் இருபதுக்கு20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியின் போது இலங்கை வீரர்கள் ஒழுங்கீனமாக நடந்து கொண்டதாக சிலர் குற்றம்சாட்டி வருகின்றனர். குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் நான் அமைச்சர் பதவியை இராஜினாமா செய்யத் தயார். விளையாட்டை அரசியலில் இருந்து விடுவிக்க தற்போது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. புதிய விளையாட்டுச் சட்டத்தின் மூலம் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் கூட எந்த விளையாட்டு சங்கத்திலும் பதவி வகிக்க முடியாது.

இலங்கைபிரீமியர்லீக்கிரிக்கெட் போட்டியானது சர்வதேச கிரிக்கெட் பேரவையால் மேற்கொள்ளப்படும் ஒரு பணியாகும். எனவே, அந்த விடயத்தில் நாங்கள் தலையிடுவதில்லை. சர்வதேச கிரிக்கெட் பேரவையிடம் இருந்து நிதியைப் பெற்று, பகல் - இரவு போட்டிகளை நடத்தும் திறன் கொண்ட மற்றொரு மைதானத்தை நிர்மாணிக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது. உலகக் கிண்ணம் போன்ற போட்டிகளை ஒரே நாட்டில் நடத்துவதற்கு, பகல் - இரவுப் போட்டிகளை நடத்தக்கூடிய சர்வதேச அளவிலான 5 மைதானங்கள் அந்த நாட்டில் இருக்க வேண்டும்.

ஒரு மைதானத்தை நிர்மாணிப்பதன் மூலம் இந்த நாட்டில் அந்தத் தேவை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம், 2026 கிரிக்கெட் உலகக் கிண்ணப் போட்டியை இலங்கையில் மாத்திரம் நடத்தக் கூடிய வாய்ப்பைப் பெறவும் நாம் எதிர்பார்க்கின்றோம். அதேபோன்று பாடசாலை ரக்பி வீரர்கள் 400 பேருக்கு காப்புறுதி வழங்கப்பட்டு அந்தப் பிள்ளைகளை பராமரிக்கும் வகையில் புதிய திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. விளையாட்டு சக்தி திட்டத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்ட 850 விளையாட்டுவீரர்களுக்குமாதாந்தம் 10,000 ரூபாவை போசாக்கு கொடுப்பனவாக வழங்கவும் அரசாங்கம், அதிக செயல்திறன் கொண்ட அறுபது வீரர்களை தேர்வு செய்து அவர்களுக்கு மாதம் 50,000 ரூபா வழங்கவும் அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

அதேபோன்று, சுகததாச விளையாட்டு மைதானத்தைப் புனரமைப்பது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதற்காக கெத்தாராம விளையாட்டு மைதானத்தைக் கிரிக்கெட் நிறுவனத்திடம் ஒப்படைத்து ஒரு பில்லியன் ரூபாவை பெற்று இந்த புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளவும் எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன், சுகததாசவின் கீழ் நாடளாவிய ரீதியில் உள்ள விளையாட்டு வளாகங்களை கையேற்கும் வகையில் எதிர்காலத்தில் சட்டம் இயற்றவும் எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்தவருடம்ஆகஸ்ட்மாதம்பெரும் விளையாட்டு விழாவொன்றை நடத்தவும் விளையாட்டு அமைச்சு திட்டமிட்டுள்ளது.

நாட்டைவங்குரோத்துநிலையில் இருந்து மீட்டு, ஒரு குறிப்பிட்ட ஸ்திரநிலைக்குகொண்டுவருவதன் மூலம் இவை அனைத்தும் செய்யப்படுகிறது. இதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான வேலைத்திட்டம் பெரும் உதவியாக இருந்தது. பொருளாதார ஸ்திரத்தன்மை உறுமய திட்டம், சுற்றுலாத் துறையின் ஊக்குவிப்பு மற்றும் விளையாட்டுத் துறையின் ஊக்குவிப்பு ஆகியவற்றில் பெரிதும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

எனவே, எதிர்காலத்தில் தேர்தல் கண்டிப்பாக நடத்தப்படும். மக்கள் தங்களின் வாக்குகளை சரியான முறையில் பயன்படுத்தினால் அடுத்த தசாப்தம் பிரஜைகளின் தசாப்தமாக மாறும் என்பதையும் குறிப்பிட வேண்டும் என்றார்.

## பேராயரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறிசேன தெரிவித்தார்.

கண்டியில் சுதந்திர கட்சி தொகுதி அமைப்பாளர்களுடன் இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

கட்சி தலைவராக செயற்படுவதற்கே நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது. மாறாக அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அல்ல. எனவே நாம் எமது வழமையான அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதில் சிக்கல் இல்லை. சில அரசியல் மூடர்களின் விளையாட்டுக்கள் இன்னும் இரண்டே மாதங்களில் நிறைவடையவுள்ளன. அதன் பின் அவர்கள் எங்கு ஓட்டமெடுப்பார்கள் என்று தெரியாது.

அரசியலில் யாருடைய வாயையும் எம்மால் மூட முடியாது. கட்சி யாப்பிற்கமைய தற்போது ஆளும் தரப்புடன் இணைந்து செயற்படுபவர்களுக்கு சுதந்திர கட்சியில் எந்த உரிமையும் கிடையாது. எமக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு விசாரணைகள் இன்னும் நிறைவடையவில்லை. தடையுத்தரவும், இடைக்கால தடையுத்தரவும் மாத்திரமே பிறப்பிக்கப்பட்டுள்ளன.

ஊடகங்களும் மக்கள் மத்தியில் சரியான தகவல்களை கொண்டு செல்வதில் பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும். யாப்பிற்கமைய சுதந்திர கட்சி எம்மிடமே காணப்படுகிறது என்பதை ஆதரவாளர்களிடம் கூறிக் கொள்கின்றேன். ஆளும்தரப்புடன்உள்ளவர்களுக்கு எந்த உரிமையும் இல்லை. விரைவில் தற்போதுள்ளவர்களின் அதிகாரங்கள் காணாமல் போகும். எனவே தேர்தலுக்கு தயாராகுமாறு சு.க. ஆதரவாளர்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

பேராயர் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை மற்றும் சில அரசியல்வாதிகள் இணைந்து என்னை கொல்லாமல் கொல்கின்றனர். நான் குண்டுத் தாக்குதல் நடத்தினேனா? ஆயுதங்கள் தயாரித்தேனா? வெடி மருந்துகள் உற்பத்தி செய்தேனா? குண்டு தாக்குதல்களை நடத்தி சிறையிலுள்ள நூற்றுக்கணக்கானவர்கள் தொடர்பில் எவரும் பேசுவதில்லை.

நான் தான் அனைவருக்கும் பிரச்சினையாகவுள்ளேன். எது எவ்வாறிருப்பினும் உத்தேச ஜனாதிபதித் தேர்தலில் சுதந்திர கட்சி வேட்பாளராக நாம் விஜேதாச ராஜபக்சவை சுதந்திர கட்சி வேட்பாளராகக் களமிறக்கி, வெற்றி வாகை சூடுவோம் என்றார்.






## தமிழ் பொது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானம் உறுதி செய்யப்பட்டு ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இது தொடர்பில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஊடகப்பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்ததாவது:

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஏற்கனவே கொள்கை அளவில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரைநிறுத்துவதெனதீர்மானம் எடுத்திருந்தது. கூட்டணியின் நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தில் குறித்த கொள்கையளவிலான தீர்மானம்உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு சம்பந்தமாக தென்னிலங்கைத் தலைவர்கள் எவ்விதமான தீர்மானத்தினையும் முன்வைக்காத நிலையில் தமிழர்களின் அபிலாஷைகளை வெளிப்படுத்தும்வகையில்ஜனாதிபதி தேர்தலை பயன்படுத்துவது அவசியமாகும். அதன் மூலமாக தென்னிலங்கைக்கும், சர்வதேசத்துக்கும்தமிழ்மக்களின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் நோக்கத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் தமிழ் பொதுவேட்பாளர் நிறுத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருந்து ஒன்றிணைந்துள்ள சிவில் அமைப்புக்களின் கூட்டான தமிழ் மக்கள் பொதுச்சபையை ஜூன் 29 சந்தித்துக் கலந்துரையாடவுள்ளோம். குறித்த கலந்துரையாடலில் தமிழ் பொதுவேட்பாளர்முன்வைக்கவுள்ள விடயங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் சம்பந்தமாக விரிவாக ஆராயப்படவுள்ளது என்றார்.

இதேவேளை, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் கலந்துரையாடலின்போது தமிழ் பொதுவேட்பாளர் ஒருவர் நிறுத்தப்பட்டு போட்டியிடும்போது அதனையொருபொதுவாக்கெடுப்பாக கருதிச் செயற்படுவதில்லை என்றும் அந்த விடயத்தில் கூடிய கரிசனைகளைக் கொள்ள வேண்டும்என்பதுசம்பந்தமாகவும் கவனத்தில்கொள்ளப்பட்டதாகஅதில் கலந்துகொண்ட பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

## வாக்குக்காக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்பவரே பொது ஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக வர முடியும். தேர்தலில் பொது ஜன பெரமுன கட்சியில் வாக்குக் கேட்பதற்கு மட்டும் வருபவர்கள் மற்றும் அந்தக் கட்சியில் வாக்குகளைப் பெற்றுக் கொண்டு தற்போது தனியாக செயற்படும்எவருடனும்எத்தகைய கூட்டணியையும் மேற்கொள்ளப் போவதில்லை.

பொதுஜன பெரமுனவுடன் சென்று தேர்தலில் வெற்றி பெற முடியாது என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடனா உள்ளவர்களில் ஒரு தரப்பினர் தெரிவித்து வருகின்றனர். அவ்வாறு தெரிவிப்பவர்கள்பொதுஜனபெரமுன கட்சியை கைவிட்டு வேறு வழியில் செல்ல முடியும் என்றார்.

காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



# கலை இலக்கிய பேரவையின் ஹஜ் விழாவும் பரிசளிப்பும்

**கந்தளாயில் நடந்தது**





(எச் எம் ஹலால்தீன் )

கந்தளாய் கலை இலக்கிய பேரவையால் ஏற்பாடு செய்யப்பட்ட ஹஜ் விழாவும் கலை இலக்கிய நிகழ்வும் ஞாயிற்றுக்கிழமை அல்தாரிக் மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இலக்கியபேரவையின்தலைவர் முஸ்தபா சஹாப்தீன் தலைமையின் கீழ் நடைபெற்ற இந்த நிகழ்வில் மூதூர் சுகாதார வைத்தியஅதிகாரிஹில்மிமுகைதீன் பாபா,முன்னாள்மூதூர்பிரதேசசபை உறுப்பினர்,கந்தளாய் முன்னாள் பிரதேசசபைஉறுப்பினர்,முன்னாள் கந்தளாய்பிரதேசசபைஉறுப்பினர், முள்ளிப்பொத்தானைகோட்டக்கல்வி அதிகாரி, கந்தளாய் கோட்டக்கல்வி அதிகாரி, அல்தாரிக் பாடசாலை அதிபர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



நிகழ்வின்இறுதியில்நடத்தப்பட்ட போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழும் வழங்கப்பட்டன. (05)

# முள்ளிப்பொத்தானையில் காட்டு யானை அட்டகாசம்



(எச் எம் ஹலால்தீன்)

திருகோணமலை-தம்பலகாமம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முள்ளிப்பொத்தானைப் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை இரவு 2 மணி அளவில் நகருக்குள் புகுந்த காட்டு யானைகள் பயன்தரக்கூடிய தென்னை வாழை, மரவள்ளி முதலான மரங்களையும் துவம்சம் செய்துள்ளதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

அருகில் ஈச்சம்குளம் ஒன்று



இருப்பதன் காரணமாக அங்கிருந்து வருகைதரும்யானைக்கூட்டங்களே இவ்வாறு வீடுகளில் செய்கை பண்ணப்பட்டுள்ள பயன்தரும் பல மரங்களை துவசம் செய்வதாகத் தெரிவிக்கின்றனர்.

இதனால் தமது பயிர்கள் பாதிக்கப்படுவதோடு தாம் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

இரவு நேரங்களில் தூங்க முடியாது உள்ளதோடு தமது பிள்ளைகளின் தூக்கமும் கெட்டுப் போவதாகத் தெரிவிக்கின்றனர்.

இரவு நேரங்களில் வெளியில் நடமாடுவது தமக்கு பயத்தை ஏற்படுத்துவதாகவும் தமது வீடுகளுக்குள் வைக்கப்பட்டுள்ள பொருள்களை எடுப்பதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே அரசாங்கம் இதற்கான நல்லதொரு முடிவைத் தமக்கு பெற்றுத் தர வேண்டும் என மக்கள் தெரிவிக்கின்றனர். (05)

# காலத்தை வென்று , காவியமாக வெற்றித்....




புரியச் சொல்லி நிற்கின்றார் கண்ண தாசன் .இதனால் வெற்றித்திருமகன் தானே!

கவிஞ்ஞன் என்பவன் ஒரு குறுகிய வட்டத்துக்குள் சிந்திக்கக் கூடாது. அவன் சொல்லும் கருத்துக்கள் உலகம் தழுவ வேண்டும் வள்ளுவர் குறள் அப்படிப்பட்டது தான்.வள்ளுவரின் பரந்து விரிந்த நோக்கால் அவரின் திருக்குறள் உலகம் தழிவிய தாக இருக்கிறது. நமது கவிஞ்ஞரும் அப்படியான ஒரு மனநிலையில்த்தான் செயற்பட நினைக்கின்றார். வள்ளுவர் -- அறம், பொருள், இன்பம் பற்றியெல்லாம் பாடினார். கண்ணதாசனும் அறத்தை , இன்பத்தை , பொருளை, எல்லாம் பாடினார்.அத்தோடு அருளையும் தமது பாட்டுக்களால் தந்தும் நின்றார்.

சங்கரமடத்தைச்சரண் அடைந்தார்.ஒருகாலத்தில் காவிகட்டியவர்களையும் சங்கரமடத்தாரையுமே சாடியவர் பின்பு தானாகவே சரண்புகுந்தார். இது அவரிடம் ஏற்பட்ட மடை மாற்றமாகும்.அதே கண்ணதாசனே ‘ யேசுகாவியத்தை ’ப்பாடி மீண்டும் தனது நோக்கை விரிவாக்கிக் கொள்கின்றார்.புத்தரைப் பாடுகிறார்.நபிகளைப் பாடுகி றார்.சத்தியம், நேர்மை, சமத்துவம் யாவற்றையும் போற்றிப் பாடுகின்றார்.

‘ புத்தன் யேசு காந்தி பிறந்தது
பூமியில் எதற்காக தோழா
பூமியில் எதற்காக .... என்று கேள்வி எழுப்பி தனது நிலை எமக்கெல்லாம் காட்டி நிற்கின்றார் கவியரசர் அவர்கள்.

இறையுணர்வு ஊறிவிட்டால் யாவும் சிறந்த



கருத்துக்களாகவேவந்துநிற்கும். அதில்பலதத்துவங்கள் வந்துவிடும். வேதத்திலும் , உபநிடதத்திலும் , உன்னை அறிதல் என்பது பெரிய அரிய பெரிய தத்துவமாகும்.
‘ தத்துவம் அஸி’அஹம் பிரம்
மாஸி’உபநிடதத்தின்உயிநாடியாகக்கருதப்படுகிறது. ரமண மகரிஷியும் ’ முதலில்
நீ யார் என்பதை’ அறி என்றுதான் சொல்லுகிறார். இப்படியான உயர்தத்துவக் கருத்தை கண்ணதாசன் மிகவும் எளிதாக்கி எமக்குத் தரும்விதம் அவரின் உயராற்றலைத்தான் வெளிப்படுத்துகிறது எனலாம்.

’ உன்னை அறிந்தால் நீ உன்னை அறிந்தால்
உலகத்தில் போராடலாம்
வாழ்ந்தாலும் தாழ்ந்தாலும் தலை வணங்காமல்
நீ வாழலாம்’

வாழ்ந்தாலும், தாழ்ந்தாலும், வாழுவோம் என்பது எல்லோரிடத்தும் எளிதாக் வரக்கூடிய தல்ல. அதற்கு ஒரு மனப்பக்குவம் தேவை. ‘ நாமார்க்கும் குடியல்லோம்நமனை அஞ்சோம்’ என்னும்நாவுக்கரசர் அஞ்சாவார்த்தை ‘தலை வணங்காமல்வாழுதலில்’ தெரி கிறதல்லவா?

மனமானது சமநிலைக்கு வந்து விட்டால் எதற்கும் அது ஆயத்தமாகிவிடும். இது ஒரு யோக நிலையாகும். இதனைக்கவிஞ்ஞர் எப்படிச்சொல்கிறார் பாருங்கள்..

‘நான் – கடலளவே பெற்றாலும் மயங்கமாட்டேன் –அது
கையளவே ஆனாலும் கலங்கமாட்டேன்’

இந்த நிலை சாதாரணமாக எல்லோருக் கும் வந்து விடமாட்டாது என்பதைக் கவிஞ்ஞரின் வரிகள் மிக அற்புதமாகக் காட்டிநிற் கின்றன் அல்லவா?

குழப்பங்கள் வருவது மனித வாழ்வில் தடுக்கமுடியாத ஒன்று. ஆனால் அந்தக் குழப்பத்தையும் நாம் விளங்கி மனத்தைக் கலங்க விடக்கூடாது என்கின்றார் கவிஞ் ஞர்.

‘ மயக்கமா தயக்கமா மனதிலே குழப்பமா
வாழ்க்கையில் நடுக்கமா
வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும்
வாசல் தோறும் வேதனை இருக்கும்’

வாழ்க்கையில் குழப்பம் வந்தால் தயக்கம்வரும் அதே நேரம் நடுக்கமும் வந்தே சேரும்.அரசன் முதல் ஆண்டிவரை அனைவருக்கும் இந்த நிலை வெவ்வேறு உருவத் தில் – வெவ்வேறு விதமாக வரும். எல்லார் வீட்டுக்கும் வாசற்படி இருபது போல வேதனைகளும் வீடுதோறும் இருக்கவே செய்யும்.இது எத்தனை அனுபவமான ஒரு மிகப்பெரிய கருத்து. யாருமே வேதனைகளில் இருந்து தப்பித்துக் கொள்ளவே முடியாது

எனவே

‘ கலங்காதிருமனமே உன்கனவெல்லாம் நனவாகும் ஒரு தினமே ‘ எனஆறுதலும் கூறுகின்றார் கண்ணதாசன் அவர்கள்.

அதே வேளை

‘ வந்த துன்பம் எது என்றாலும்
வாடி நின்றால் ஓடுவதில்லை
எதையும் தாங்கும் இதயமிருந்தால்
இறுதிவரைக்கும் அமைதியிருக்கும்
..............................................................
நாளைப் பொழுதை இறைவனுக் களித்து
நடக்கும் வாழ்வில் அமைதியைத் தேடு’

என்றுபுத்தியும்கூறுகின்றார். அதோடுநின்றுவிடாமல் மிகவும் முக்கியமாக ஒன்றையும் சொல்லி நிற்கின்றார்..

‘ உனக்குக் கீழே உள்ளவர் கோடி
நினைத்துப் பார்த்து நிம்மதி நாடு’

எப்பொழுதும் நாங்கள் அனைவருமே எங்களின் நிலையை மட்டுமே தினமும் பார்த்துப்பார்து எனக்கு மட்டும் ஏன் இப்படி? அவன் நல்லாய் இருகிறானே! என்று அல்லும் பகலும் மற்றவர்களைப் பார்த்து எமக்குக் கிடைத்தவற்றையும் வீணடித்து விடுவோம்.காலுக்குச் செருப்பில்லை என்பவனுக்கும் கவலை.அதே நேரம் காலே இல்லை என்பவனுக்கும் கவலை.கஞ்சிக்கு உப்பில்லை என்பவனுக்கும் கவலை. குடிக்கக் கஞ்சி இல்லையே என்பவனுக்கும்கவலை. இதில்எது முக்கியம்என்பதை உணராமல் இருப்பதே பெரிய கவலை என்பதை யாவரும் உணர்தல் வேண்டும் என்பதை கவிஞ்ஞர் சொல்லுவதை விட யாராலும் இவ்வளவு எளிமையாகச் சொல்லி விட முடியாதல்லவா? எத்தனையோ பேர் எம்மைவிடவும் மோசமாக இருக்கிறார்கள் என்பதை ஒர் கணம் நினைத்தால் நாங்கள் படும் துன்பம் பெரிதாகவே தெரியாமல் போய்விடும் என்பதைக் கண்ணதாசன் சொல்லும் இடத்தால் அவர் உயர்ந்த கவிஞ்ஞன் ஆகி நிற்கிறார் எனலாம்.

வாழ்க்கையில் அவர் அனுபவிக்காத இன்பங்களும் இல்லை.துன்பங்களும் இல்லை எனலாம். அவற்றை யெல்லாம் அவர் எங்களுக்குத் தனது கவிதைகள் வாயிலாகத் தரவும் மறக்க வில்லை.

‘ எங்கே வாழ்க்கை தொடங்கும் – அது
எங்கே எவ்விதம் முடியும்
இதுதான் பாதை இதுதான் பயணம்
என்பது எவருக்கும் தெரியாது ‘ இது பெரிய தத்துவம்தான் ஆனால் இதில் கவிஞ்ஞரின் ஒரு பங்கும் காணப்படுகிறது.சிறு கூடல்பட்டியில் இருந்து சென்னை வந்து படுக்க இடமில்லாமல் கடற்கரை ஓரத்தில் படுக்க அங்கும் படுக்க முடியாமல்
போலீஸ்காரர்களால் கண்ணாதாசன் போக்கிடம் இல்லாமல் விரட்டி அடிக்கப்படு கிறார்.அப்பொழுது அவரது வாழ்க்கைப் பயணம் எப்படி அமையப்போகிறது எங்கே முடியப்போகிறது என்பது அவருக்கே புரியாத ஒன்றாக இருந்திருக்கலாம் அல்லவா?

இதுவும் ஒருகருத்தாயும் இருக்கலாம். அதேவேளை மனித வாழ்வை நாங்கள் தீர்மா னிக்கவும் முடியாதிருக்கும் என்பதும் கூட கருத்தாகலாம்தானே!

சுத்திச்சுத்தி கடவுளிடம்தான் கண்ணதாசன் வருகின்றார்.எதைச்சொல்லுவதானாலும் கடவுளையும் கூடவே வைத்திருப்பார்.

நல்லவர்க் கெல்லாம் சாட்சிகள் ரெண்டு ஒன்று மனட்சாட்சி
ஒன்று தெய்வத்தின் சாட்சியம்மா
நம்பிக்கை வைத்து கல்லையும் பார்த்தால் தெய்வத்தின் காட்சியம்மா
அதுதான் உள்ளத்தின் சாட்சியம்மா --- அதுதான் உண்மையின் சாட்சியம்மா

மனிதர்களேமனட்சாட்சிக்குமதிப்பளியுங்கள்.அல்லது தெய்வத்தை நம்புங்கள்.இப்படி செய்யாது விட்டால் அது உங்களுக்கு ஏற்றதல்ல அது நல்ல வாழ்வுக்கும் வழி வகுக்காது என்று சொல்லி எமக்கு நற்சிந்தனை வழங்குகின்றார் கண்ணதாசன் அவர்கள்.

அவரின் பாடல்கள் அழியாப் புகள் பெற்றன என்பதில் எள்ளளவும் எந்தவித ஐயமும் இல்லை. ஆனால் கண்ணதாசன் வாழ்கின்றார் என்றால் அவரின் ‘ அர்த்த முள்ள இந்துமதம் ‘ பெருங்காரணம் என்பதை எவருமே மறுக்க முடியாது. முப்பத்தெட்டு வருடங்கள் கவியரசனாகப் புவியையாண்டவன் கண்ணதாசன். எழுத்தாலும், பேச்சாலும் எம்மைக்கட்டிப்போட்டவன்.’வாழநினைத்தால்வாழலாம் ‘என்றுதைரியம்கூறியதமிழ்க்கவிஞன்.ஆகவேஅவன் காலத்தைவென்று, காவியமாகவெற்றித்திருமகனாகவே நிற்கிறான்.

# சமூக சேவை அமைப்புகளுக்கு கௌரவம்




(எஸ்.அஷ்ரப்கான்,சியாத் எம்.இஸ்மாயில், றியாஸ் ஆதம், பாறூக் ஸிஹான்)

நிந்தவூர் ரோஸ் றீனா நிறுவனத்தின் சமூக சேவைப் பிரிவின் ஏற்பாட்டில் அர்ப்பணிப்புமிக்க சேவைகளை சமூகத்திற்காக முன்னெடுத்த நலன்புரி அமைப்புக்களை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு சனிக்கிழமை நிந்தவூர் அழகாபுரி தனியார் விடுதியில் இடம்பெற்றது.

ரோஸ் றீனா சமூக சேவைகள் அமைப்பின் ஸ்தாபகரும், முகாமைத்துவப் பணிப்பாளரும், சமூக ஆர்வலருமான ஏ.ஜே.ஜனுபர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முன்னாள் இராஜாங்க அமைச்சின் செயலாளரும், தேசிய எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் உறுப்பினரும், சம்மாந்துறை மஜ்லிஸ் சூரா அமைப்பின் தலைவருமான எம்.ஐ.அமீர் (நழிமி) பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்.

நிந்தவூர் மற்றும் சாய்ந்தமருது பிரதேச செயலாளர்களான ஏ.எம்.அப்துல் லத்திப், எம்.எம்.ஆசிக் மற்றும் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை மற்றும் நிந்தவூர் ஆதார வைத்தியசாலை ஆகியவற்றின் வைத்திய அத்தியட்சகர்களான வைத்தியர் ஏ.எல்.எப்.ரஹ்மான், வைத்தியர் எம்.பீ.ஏ.அப்துல் வாஜித், நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் கே.எல்.எம்.ரயிஸ், கல்முனை உதவிக் கல்விப் பணிப்பாளரும் நிந்தவூர் ஜும்மா பள்ளிவாசல் தலைவருமான எம்.ஏ.எம்.றசீன் ஆகியோர் இந்நிகழ்வில் சிறப்பு அதிதிகளாகவும் கலந்துகொண்டனர்.

இவ்வமைப்பால் முதற்கட்டமாக அம்பாறை மாவட்டத்தில் அர்ப்பணிப்பு மிக்க சமூக சேவைகளை முன்னெடுத்த நலன்புரி அமைப்புக்கள், சமூக சேவையாளர்கள் பாராட்டி நினைவு சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

எதிர்காலத்தில் மேலும் பல சமூக சேவை அமைப்புக்கள் அமைப்பின் பிரதிநிதிகள் இவ்வமைப்பால் பாராட்டி கௌரவிக்கப்பட உள்ளதோடு, சமூகப் பரப்பில் காணப்படுகின்ற சமூக விரோத செயற்பாடுகளைக் களைவதற்கும் சிறுவர்கள், இளைஞர்கள் செல்லுகின்ற பாதையை ஒழுங்கமைப்பதற்குமான பணியிலே ரோஸ் றீனா சமூக சேவை பிரிவு போன்று அனைத்து சமூக சேவை அமைப்புகளும் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான அழைப்பை ரோஸ் றீனா சமூக சேவை அமைப்பின் ஸ்தாபகர் சமூக ஆர்வலர் ஏ.ஜே. ஜனுபர் விடுத்திருந்தார். (05)

## சம்மாந்துறை மகளிர் அரபு கல்லூரிக்கு உதவி






(எம்.எம்.ஜெஸ்மின்)

கிழக்கு சமூக அபிவிருத்தி சங்கம் சம்மாந்துறையில் பெண் மாணவிகள் கல்வி பயிலும் அரபுக் கல்லூரி ஒன்றுக்கு உதவும் திட்டமொன்ற அமுல்படுத்தியுள்ளனர்.

இந்தக் கல்லூரியில் நிலவும் அடிப்படைத் தேவைகளையும் நிலையான நீண்ட கால பயன்பாட்டு மின்சார நிலுவைத் தொகையைத் தீர்ப்பதற்கும் உதவி புரிந்ததோடு மாதாந்த பயன்பாட்டு பற்றுச் சீட்டுகளை நிர்வகித்தல் மற்றும் செலுத்தும் பொறுப்பை ஏற்றுக்கொண்டது.

இந்த மதரஸா 50 இற்கும் மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட பெண் மதரஸா ஆகும். (05)

## ஹிஸ்புல்லாஹ்வின் அழைப்பிலேயே ஜனாதிபதி காத்தான்குடிக்கு வருகை



(கே எ ஹமீட்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புதிய காத்தான்குடி அல்-அக்ஸா ஜும்ஆ பள்ளிவாயிலுக்கு விஜயம் செய்தார்.

இதன் போது பலஸ்தீன் காஸா மக்களுக்காக நடைபெற்ற துஆ பிரார்த்தனையிலும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கலந்து கொண்டார்.

பள்ளிவாயிலுக்கு விஜயம் செய்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை

முன்னாள் அமைச்சரும் முன்னாள் ஆளுநருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புழ்ழாஹ் மற்றும் பள்ளிவாயல் நிர்வாகத்தினர் வரவேற்றனர்.

இந் நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர்களான ஏ.எல்.எம். அதாவுல்லாஹ், அலி சாஹீர் மௌலானா ஜனாதிபதியின் ஆலோசகர் சாகல ரத்நாயக்கா உட்பட பிரமுகர்கள் உலமாக்கள், அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது ஜனாதிபதிக்கு பள்ளிவாயல் நிர்வாகத்தால் அதன் தலைவர் கே.எல். பரீட் பொன்னாடை போர்த்தி கௌரவித்ததுடன் காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம், காத்தான்குடி ஜெம்யிய்யத்துல் உலமா சபை காத்தான்குடி மக்களிடம்




காஸாவில் உள்ள சிறுவர்களுக்காக சேகரிக்கப்பட்ட 10,769,417 ரூபாவுக்கான காசோலையும் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் விசேட துஆ பிரார்த்தனையை மௌலவி ஏ.ஜி.எம் அமீன் பலாஹி நிகழ்த்தினார். (05)

## வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் மூலம் ஊடகவியலாளர்களை ஒன்றிணைத்து ஊடகமன்று

### அம்பாறையில் உருவாக்க வேலைத்திட்டம்



(எம்.ஏ.றமீஸ்)

அம்பாறை மாவட்டத்தில் உள்ள அனைத்து இன ஊடகவியலாளர்களை ஒன்றிணைத்து அவர்களிடையே பரஸ்பர ஒற்றுமையை ஏற்படுத்துவதோடு நிலைபேறான ஊடக மன்றத்தை அமைக்கும் வேலைத் திட்டமொன்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சும், இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகமும் இணைந்து - வெளிநாட்டு வேலை வாய்ப்புத் துறைக்கு அறிவு பூர்வமான ஊடக நுழைவு எனும் விஷேட வேலைத் திட்டம் ஞாயிற்றுக்கிழமை முன்னெடுத்திருந்தன.

தொழில் மற்றம் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது துறைசார் முக்கியஸ்தர்கள் பலர் கலந்துகொண்டனர்.

மாவட்டங்கள் தோறும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், அம்மாவட்டத்தில் உள்ள ஊடகவியலாளர்களை ஒன்றிணைத்து எதிர்காலத்தில் பல்வேறு மக்கள் நல செயற்றிட்டங்களை முன்னெடுக்கும் நோக்கிலேயே இவ் வேலைத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது.



வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணிகத்தின் மூலம் மாவட்டங்கள் தோறும் ஊடக மன்றங்களை நிறுவி, மாவட்டங்களில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக பல்வேறு நாடுகளுக்குச் செல்லும் பொதுமக்களுக்கு ஏற்படும் நன்மைகள் மற்றும் அசௌகரியங்கள் போன்றவற்றை ஊடக மயப்படுத்தி அனைவருக்கும் நன்மை ஏற்படும் வகையில் இவ்வாறு அமைக்கப்படும் ஊடக மன்றங்கள் செயற்படவுள்ளன.

இதன் அடிப்படையில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் மூலம் ஏற்கனவே கண்டி, புத்தளம், குருநாகல், அனுராதபுரம், கேகாலை, திருகோணமலை, நுவரெலியா, கம்பஹா, மன்னார், வவுனியா போன்ற மேலும் சில மாவட்டங்களில் ஊடக மன்றங்கள் நிறுவப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள் நீதிகோரிப் போராட்டம்

## மட்டக்களப்பில் நேற்று நடந்தது




மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் ஏற்பாட்டில் நீதிகோரி போராட்டமொன்று நேற்று (திங்கட்கிழமை) காலை காந்தி பூங்கா முன்பாக இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் தலைவி அ.அமலநாயகி தலைமையில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் உறவினர்கள் பெருமளவானோர் கலந்து கொண்டிருந்தனர்.

காணாமல் போனவர்களின் குடும்பங்களை மிரட்டுவதையும் அச்சுறுத்துவதையும் நிறுத்துங்கள், கொலைகாரனால் நீதி வழங்க முடியுமா?, பிள்ளைகளை தினம் தேடிக் கொண்டே நீதி இன்றியே இறந்து கொண்டிருக்கின்றோம், நாங்கள் கேட்பது இழப்பீட்டையோ மரணச் சான்றிதழையோ அல்ல முறையான நீதி விசாரணையே போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறும் கோஷங்களை எழுப்பியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது சர்வதேச சமூகத்திற்கு கொண்டுசெல்லும் வகையிலான கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றும் இங்கு சங்க செயலாளரால் வாசிக்கப்பட்டது.

சுமார் 100 இற்கு மேற்பட்ட காணமல் ஆக்கப்பட்டவர்களின் கலந்து கொண்டதுடன் ஒரு மணி நேரம் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

ஒவ்வொரு மாதமும் 24 ஆம் திகதி தமது உறவுகளுக்கு நீதிகோரிய போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் தலைவி அ.அமலநாயகி தெரிவித்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த அமலநாயகி –

கடந்த கால தொடர் போராட்டங்கள் மூலமாக சர்வதேசத்தினுடைய பார்வை எமது பக்கம் திரும்பப்பட்டிருக்கின்றது. எங்களுடைய மக்களுக்கான நீதி விசாரணை வேண்டும் என்பதை அழுத்தமாக சர்வதேச நாடுகள் அறிக்கைகளின் ஊடாக வெளிப்படுத்தி இருந்தாலும் எங்களுடைய தொடர் போராட்டங்கள் எங்களுடைய உறவுகளுக்கு என்ன நடந்தது? அதற்கான பொறுப்புக்கூற வேண்டிய அவசியம் எமது உறவுகள் நமக்குக் கிடைக்க வேண்டும்.

அல்லது அவர்களுக்கு என்ன நடந்தது என்கின்ற விடயங்களை சர்வதேசத்தின் ஊடாக நாங்கள் கொடுத்த பாரிய போராட்டங்கள் ஊடாக சர்வதேச பார்வை திரும்பப் பெற்ற நிலையில் எமது வடக்கு கிழக்கு உள்ள 8 மாவட்டங்கள் இணைந்து 23 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரை ஒவ்வொரு மாவட்டங்களிலும் தொடர்ச்சியாக ஒவ்வொரு நாளும் இந்தப் போராட்டங்கள் இடம்பெறும்.

இன்று கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர் போராட்டம் இடம்பெற இருக்கின்றது. இவ்வாறு மாறி மாறி வடக்கிலும் கிழக்கிலும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளில் உறவினர்களால் இந்த கவன ஈர்ப்பு போராட்டங்கள் எங்களுடைய உறவுகளுக்கு நீதி கிடைக்கும் வரைக்கும் இந்த போராட்டங்கள் தொடர்ந்த வண்ணம் காணப்படும்.

இந்த சந்தர்ப்பத்தில் எங்களுடைய உறவுகளுக்கு என்ன நடந்தது இனிமேல் இந்த ஆற்கடத்தல்கள் அத்தோடு எங்களுக்கு நடந்த நிலைமைகள் எவருக்கும் நடக்கக்கூடாது என்பதற்காகவும் இவ்வாறான பதினைந்து வருடங்கள் கடந்த நிலையில் நாங்கள் தொடர்ச்சியாகப் போராடிக் கொண்டு வருகின்றோம்.

2017 ஆம் ஆண்டு தொடக்கம் தனித்துவமாக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளால் இந்த போராட்டங்களை வடக்கு கிழக்கு இணைந்து செயல்பட்டு இந்தப் போராட்டங்களை செய்து வருகின்றதன் பிரதிபலனாக இன்று சர்வதேசத்தின் பார்வை எங்கள் பக்கம் ஈர்க்கப்பட்டு இருக்கின்றது.

இலங்கை அரசாங்கம் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தையும் கொண்டுவந்து அவர்களுக்கான நாட்ட ஈடுகளை வழங்குகின்றோம் எனக் கூறி மக்களை பெருமளவு ஏமாற்றி அந்த கோப்புக்களை முடிவுறுத்தி விடுவதற்கான செயற்பாடுகளை சரியாக கள்ளத்தனமான வேலைகளை காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தால் முன்னெடுத்துக் கொண்டு வருகின்றனர்.

உண்மையில் நான் அந்த அலுவலகத்திற்குச் சென்று பதிவு செய்யவில்லை ஆனால் எங்கேயோ இருந்து எங்களுடைய தரவுகளை எடுத்துக் கொண்டு தங்களுக்கு எங்களுடைய ஆவணங்கள் கிடைக்கப்பெற்று இருக்கின்றன. உடனடியாக வந்து பதிவு செய்யுங்கள் என்று கூறி இந்த அப்பாவி தாய்மாரை மரண பதிவு எடுத்தால்தான் இலங்கை அரசாங்கத்தின் எந்த ஓர் உதவித் திட்டமும் கிடைக்கும் என்று கூறி அவர்கள் கட்டாயப்படுத்தி மரண பதிவுகளையும் கொடுத்து இந்த மக்களை கஷ்டப்படுத்தி ஏற்கனவே கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற மக்களை இன்னும் இன்னும் கஷ்டப்படுத்திக் கொண்டு மன உள ரீதியான தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

இது ஒரு பொய்யான அலுவலகம் அல்லது இலங்கை உள்ளக பொறிமுறையை கொண்டு ஏமாற்றி ஏமாற்றி இந்த வேலைகளை இலங்கை




அரசாங்கம் செய்து கால இழுத்தடிப்புகளை செய்து உறவுகளை தேடிக் கொண்டிருந்த 200 இற்கும் மேற்பட்ட தாய்மார்களை நாங்கள் இன்று இழந்து இருக்கின்றோம். சாட்சியங்கள் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. எங்களுடைய உண்மையான சாட்சியங்கள் இல்லாமல் போகின்றன.

கண்கண்ட சாட்சியங்களாக நாங்கள் இருக்கின்றோம். ஆனால் நாங்களும் இல்லாமல் போனால் இந்த கால இழுத்தடிப்புக்கு காரணமே அதுதான். உங்களை இல்லாமல் செய்தால் காணாமல் ஆக்கப்பட்ட விடயத்திற்கு குரல் கொடுப்பதற்கு யாரும் இல்லை என்று இந்த இலங்கை அரசாங்கமும் அதனோடு சேர்ந்து செயற்படுபவர்களும் நினைத்து கொண்டிருக்கின்றார்கள்.

இளம் சந்ததி இதனைக் கொன்டு செல்கின்றது இந்த கவனவீர்ப்பு போராட்டத்தின் ஊடாக இனி ஒவ்வொரு மாதமும் 24 ஆம் தேதி இந்த காந்தி பூங்கா முன்பாக எங்களுடைய காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் எங்களுடைய உரிமைகளுக்காக எங்களுடைய உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதற்காக நாங்கள் இந்த இடத்தில் ஒன்று கூடி ஒவ்வொரு மாதமும் எமது குரலை கொடுப்போம். எங்களுக்கு நீதி கிடைக்கும் வரைக்கும் அல்லது சாகும் வரைக்கும் இந்த போராட்டம் தொடரும். – என்றார். (05)

# சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய வெதுப்பகம் கொக்குவில் பகுதியில் நேற்று சீல் வைப்பு

## நீதிமன்ற உத்தரவை அடுத்து நடவடிக்கை



நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பொது சுகாதார பரிசோதகர்கள் குழுவினரால் தொடர்ச்சியாக உணவு கையாளும் நிலையங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு, சுகாதார சீர்கேடான உணவு கையாளும் நிலையங்களிற்கு எதிராக சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் கடந்த 12.06.2024ம் திகதி நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி, மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் தலைமையிலான பொது சுகாதார பரிசோதகர்கள் குழாமினால் நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட 09 வெதுப்பகங்கள் இரவு திடீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு இருந்தன. இதன்போது கொக்குவில் பகுதியில் சுகாதார சீர்கேடாக இயங்கிய 02 வெதுப்பகங்கள் இனங்காணப்பட்டன.

இரண்டு வெதுப்பகங்களிற்கும் எதிராக கொக்குவில் பொது சுகாதார பரிசோதகர் பா. சஞ்சீவனால் நேற்று (திங்கட்கிழமை) யாழ் மேலதிக நீதிவான் நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

வழக்குகளினை விசாரித்த நீதிவான் ஏ.ஏ ஆனந்தராஜா ஒரு வெதுப்பகத்தைச் சீல் வைத்து மூடுமாறும், மற்றைய வெதுப்பகத்தைத் திருத்த வேலைகளை உடன் மேற்கொள்ளுமாறும் பணித்து வழக்குகளை எதிரவரும் 03.07.2024 இற்கு ஒத்திவைத்தார்.

அத்துடன் உரிமையாளர்களை தலா ஒருலட்சம் ஆட்பிணையிலும் விடுவித்தார். இதனையடுத்து பொது சுகாதார பரிசோதகர் பா. சஞ்சீவனால் வெதுப்பகம் சீல் வைத்து மூடப்பட்டது.(05)

# ரெலோ தலைவர் சிறீ சபாரத்னத்தின் சிலை வவுனியாவில் திறந்து வைப்பு!



தமிழீழ விடுதலை இயக்கம் எனப்படும் ரெலோ அமைப்பின் தலைவர் சிறீ சபாரத்தினத்தின் திருவுருவச் சிலை ஞாயிற்றுக்கிழமை வவுனியா நகர மத்தியில் உள்ள மணிக்கூண்டு கோபுரத்திற்கு அருகில் திறந்து வைக்கப்பட்டது.

கட்சியின் தற்போதைய தலைவர் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனால் குறித்த சிலை திறந்து வைக்கப்பட்டதோடு நினைவு கல்லை கட்சியின் செயலாளர் நாயகமும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரன் மற்றும் கட்சியினுடைய உப தலைவர் கென்றி மகேந்திரன் ஆகியோர் இணைந்து திரை நீக்கம் செய்து வைத்தனர்.

இதனை அடுத்து சிறீ சபாரத்தினத்தின் சிலைக்கு கட்சியின் முக்கியஸ்தர்கள் மலர் மாலை அணிவித்ததோடு மலர் அஞ்சலியும் செலுத்தி வணக்கம் செலுத்தி இருந்தனர்.

இதன்போது தமிழீழ விடுதலை இயக்கத்தின் தேசிய அமைப்பாளர் பிரசன்னா, புளொட் அமைப்பின் முக்கியஸ்தர்கள், ஈபிஆர்எஸ் கட்சியினுடைய முன்னாள் மாகாண சபை உறுப்பினர், தமிழரசு கட்சியின் வவுனியா மாவட்ட பிரதிநிதிகள் உட்பட தமிழீழ விடுதலை இயக்கத்தினுடைய ஆரம்பகால போராளிகள் அரசியல் செயற்பாட்டாளர்கள் மற்றும் பொது மக்களும் கலந்து கொண்டிருந்தனர்.

(05 - 100)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.06.2024இல் வெளியிடப்பெற்றது